நூல்கள்
மார்க்ஸ்
எங்கெல்ஸ்
லெனின்

# லெனின்

## மார்க்சியமும் புரட்சி எழுச்சியும்



உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

கா. மார்க்ஸ்
பி. எங்கெல்ஸ்
வி. இ. லெனின்

# இயக்கவியல் பொருள்முதல்வாதம்

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்கள்: நா. தர்மராஜன் எம். ஏ.,
கே. இராமநாதன் மற்றும் சிலர்

**К. Маркс, Ф. Энгельс, В. И. Ленин**
О ДИАЛЕКТИЧЕСКОМ МАТЕРИАЛИЗМЕ
*на тамильском языке*

**Marx, Engels, Lenin**
ON DIALECTICAL MATERIALISM
*in Tamil*

**பதிப்பாளர் குறிப்பு**

இயக்கவியல் பொருள்முதல்வாதத்தின் மூலப் பகுதிகளை வாசகருக்கு அளிப்பதன் மூலம் அதன் அடிப்படையான கருத்தமைப்புகளை அவர் தெரிந்து கொள்வதற்கு உதவுவது இத்தொகுப்பின் நோக்கம். பருப்பொருளின் வளர்ச்சி, உணர்வு மற்றும் இருத்தலின் இடை உறவைப் பற்றிய இயக்கவியல் பகுப்பாய்வைத் தெளிவாக விளக்கிக் கூறித் தத்துவஞானத்தின் அடிப்படையான பிரச்சினைக்கு முரணில்லாத பொருள்முதல்வாதத் தீர்வைத் தருகின்ற கட்டுரைகளும் யதார்த்தத்தைத் துல்லியமாகப் பிரதிபலிப்பதற்கும் அதை அறிவதற்கும் மனித சிந்தனையின் தகுதியை அங்கீகரித்தலைப் பற்றிய கட்டுரைகளும் இத்தொகுப்பில் வெளியிடப்பட்டுள்ளன. மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின் எழுதிய —இயக்கவியல் பொருள்முதல்வாத நோக்கில் குறிப்பிடத்தக்க—அனைத்துப் படைப்புகளும் இந்நூலில் இடம் பெற்றிருப்பதாகக் கூற முடியாது; ஏனென்றால் அவை அனைத்தையும் ஒரு தனிப் புத்தகத்தில் வெளியிட இயலாது. மார்க்சிய-லெனினியத்தின் மூலச்சிறப்புள்ள நூல்களில் இயக்கவியல் பொருள்முதல்வாதத்தைப் பற்றி எழுதப்பட்டிருக்கின்ற மிக முக்கியமான கட்டுரைகளை இங்கே தொகுத்துத் தந்திருக்கின்றோம்.

இத்தொகுப்பு நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது: முதல் பகுதியில் மார்க்ஸ் மற்றும் எங்கெல்ஸ் எழுதியவையும் இரண்டாம் பகுதியில் லெனின் எழுதியவையும் இடம் பெற்றிருக்கின்றன. இரண்டு பகுதிகளிலும் உள்ள கட்டுரைகள் காலவரிசைப்படி அமைக்கப்பட்டு வெளியிடப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகத்தின் முடிவில் குறிப்புகளும் பெயர்க்குறிப்பு அகராதியும் உள்ளன.

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1985
சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

МЭЛ $\frac{0101000000-258}{014(01)-85}$ 337—85

10.00

உலகத் தொழிலாளர்களே, ஒன்றுசேருங்கள்!

# லெனின்

## மார்க்சியமும் புரட்சி எழுச்சியும்

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

В. И. Ленин

МАРКСИЗМ И ВОССТАНИЕ

*на тамильском языке*

**V. I. Lenin**

MARXISM AND INSURRECTION

*in Tamil*

முதலாவது பதிப்பு: 1983
இரண்டாவது பதிப்பு: 1990

© தமிழ் மொழிபெயர்ப்பு
முன்னேற்றப் பதிப்பகம், 1983

Л $\frac{0101020000-217}{014(01)-90}$ 283—90

ISBN 5-01-002401-2

## பொருளடக்கம்


நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . 5

போல்ஷிவிக்குகள் கட்டாயம் ஆட்சியைப் பிடிக்க வேண்டும் . . . . . . . . . 6

மார்க்சியமும் புரட்சி எழுச்சியும் . . . . . 10

ஒரு பார்வையாளரின் ஆலோசனைகள் . . 19

தோழர்களுக்குக் கடிதம் . . . . . . . . 23

பதிப்பாளர் குறிப்புகள் . . . . . . . . 57

பெயர்க் குறிப்பகராதி . . . . . . . . 64



SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

## நூல் அறிமுகம்

ஆயுதந்தாங்கிய புரட்சி எழுச்சியைப் பற்றி மார்க்சும் எங்கெல்சும் கூறியுள்ள கருத்துகளை வி. இ. லெனின் இத்தொகுப்பிலுள்ள கட்டுரைகளில் செவ்வனே வகுக்கப் பட்ட முறையாகப் பொதுமைப்படுத்தியிருப்பதோடு அவற்றை வளர்த்துக் கூறியிருக்கிறார். புரட்சி எழுச் சியைப் பற்றிய அணுகுமுறையில் மார்க்சியவாதிகளுக்கும் சதிச் செயலில் ஈடுபடுகின்ற சிறு கும்பலுக்குமிடையில் என்ன வேறுபாடு உள்ளது என்பதை அவர் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். புரட்சி எழுச்சியை அவசியமாக்கு கின்ற முக்கியமான புறவகை நிலைமைகளை லெனின் வரையறுத்துக் கூறுகிறார், விசேஷ விதிகளுக்கு உட்பட்டு நடக்கும் அரசியல் போராட்டத்தில் ஒரு விசேஷ ரகம் என்ற முறையில் அதன் பிரதான விதிகளை அவர் நிர்ணயிக் கிறார். ஒரு புரட்சி எழுச்சி வெற்றியடைவதற்கு எல்லா மக்களுடைய ஆதரவும் பெருந்திரளான மக்களுடைய புரட்சிகர புத்தெழுச்சியுமே உத்தரவாதமாகும். லெனின் தோராயமான புரட்சிகர எழுச்சித் திட்டத்தை உருவாக் கினார். 1917 அக்டோபரில் அது வெற்றிகரமாக நிறை வேறியது, ருஷ்யாவில் சோவியத் ஆட்சியதிகாரத்தை நிறுவுவதற்கு வழி வகுத்தது.

## போல்ஷிவிக்குகள் கட்டாயம் ஆட்சியைப் பிடிக்க வேண்டும்

### ரு. ச. ஜ. தொ. (போல்ஷிவிக்குகள்) கட்சியின் மத்தியக் கமிட்டிக்கும் பெத்ரோகிராத், மாஸ்கோ கமிட்டிகளுக்கும் எழுதிய கடிதம்

இரு தலைநகரங்களிலும் உள்ள தொழிலாளர், படை வீரர்கள் பிரதிநிதிகளின் ஸோவியத்துகளில் பெரும்பான்மையை அடைந்துள்ள போல்ஷிவிக்குகள், தமது சொந்தக் கரங்களில் ஆட்சி அதிகாரத்தை எடுத்துக் கொள்ள முடியும், எடுத்துக் கொள்ள வேண்டும்.

அவர்கள் அவ்வாறு செய்ய முடியும். காரணம், இந்த இரு முக்கிய நகரங்களிலும் இருக்கும் புரட்சிகர சக்திகளின் செயலூக்கமுள்ள பெரும்பான்மை, மக்களைக் கூட அழைத்து செல்வதற்கும், எதிரிகளின் எதிர்ப்பை வென்று சமாளிப்பதற்கும், அவர்களைத் தகர்த்து ஆட்சி அதிகாரத்தை வென்று அதை நீடித்து வைத்திருப்பதற்கும் போதுமான அளவுக்குப் பரந்தகன்றதாக இருக்கிறது. உடனடியாக ஒரு ஜனநாயக சமாதானத்தைப் பிரேரேபிப்பது மூலமும், உடனடியாக நிலத்தை விவசாயிகளுக்கு வழங்குவது மூலமும், கேரென்ஸ்கியால் சின்னாபின்னமாக்கப்பட்டு நொறுக்கப்பட்டிருந்த ஜனநாயக நிறுவனங்களையும் சுதந்திரங்களையும் மீண்டும் நிலைநாட்டுவதன் மூலமும் போல்ஷிவிக்குகள் ஓர் அரசாங்கத்தைக் கட்டாயம் நிறுவுவார்கள். அதை எவராலும் வீழ்த்த முடியாது.

மக்களில் பெரும்பான்மையினர் நமது பக்கம் இருக்கிறார்கள். இதை மே 6 முதல் ஆகஸ்டு 31 மற்றும் செப்டெம்பர் 12 வரையிலான நிகழ்ச்சிகளின் நீண்ட வேதனை மிக்க பாதை நிரூபித்து விட்டது: தலைமை நகரங்களின் சோவியத்துகளில் நாம் அடைந்த பெரும்பான்மை, மக்கள் நமது பக்கம் ஆதரவாக வந்ததன் விளைவாகவே கிட்டியது. சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள், மென்ஷிவிக்குகளின்[1] தள்ளாட்டமும் அவர்களது அணிகளில் சர்வதேசியவாதி

களின் எண்ணிக்கை அதிகரித்ததும் இதையே நிரூபிக்கின்றன.

ஜனநாயக மாநாடு[2] புரட்சிகர மக்களின் பெரும்பான்மையைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை; மாறாக, குட்டி முதலாளித்துவ வர்க்கத்தின் சமரசப் போக்குடைய மேல் அடுக்கை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்துகிறது. தேர்தல் ஓட்டு விவரங்களால் நாம் ஏமாந்து விடக் கூடாது. தேர்தல்கள் எதையுமே நிரூபிப்பதில்லை: பெத்ரோகிராத், மாஸ்கோ நகரக் கவுன்சில்களுக்கு நடைபெற்ற தேர்தல்களை, சோவியத்துகளுக்கு நடைபெற்ற தேர்தல்களுடன் ஒப்புநோக்கிப் பாருங்கள். மாஸ்கோவில் நடைபெற்ற தேர்தல்களுடன் ஆகஸ்ட் 12 மாஸ்கோ வேலை நிறுத்தத்தை ஒப்புநோக்கிப் பாருங்கள். அவை மக்களுக்குத் தலைமை தாங்கிச் செல்லும் புரட்சிகர சக்திகளின் பெரும்பான்மை சம்பந்தமான பாரபட்சமற்ற மெய்விவரங்களாகும்.

ஜனநாயக மாநாடு விவசாயிகளை ஏமாற்றி வருகிறது. அது அவர்களுக்குச் சமாதானத்தையும் அளிக்கவில்லை, நிலத்தையும் வழங்கவில்லை.

ஒரு போல்ஷிவிக் அரசாங்கம் மட்டுமே விவசாயிகளின் கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றும்.

* * *

போல்ஷிவிக்குகள் இந்தத் தருணத்திலேயே ஏன் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ள வேண்டும்?

காரணம், நெருங்கி வரும் பெத்ரோகிராதின் சரணாகதி[3], நமது வாய்ப்புக்களை நூறு மடங்கு சாதகம் குன்றியதாக்கி விடும்.

சேனையில் கேரென்ஸ்கி வகையறா தலைமை தாங்கி வரும் போது பெத்ரோகிராத் சரணாகதி அடைவதைத் தடுப்பது என்பது நமது சக்திக்கு இயன்றதல்ல.

அரசியல் நிர்ணய சபைக்காக[4] நாம் ''காத்திருக்கவும்'' முடியாது. ஏனெனில் பெத்ரோகிராதைச் சரணாகதி அடையச் செய்வதன் மூலம், கேரென்ஸ்கி வகையறா அது கூட்டப்படுவதை எப்போதும் தடுத்துக் குலைக்க முடியும். நமது கட்சி மட்டுமே ஆட்சி அதிகாரத்தை

எடுத்துக் கொண்டவுடன் அரசியல் நிர்ணய சபை கூட்டப் படுவதை உறுதி செய்ய முடியும். பிறகு அது இதர கட்சிகளைக் காலந்தாழ்த்தியதற்காகக் குற்றம் சாட்டும், அதோடு, தனது குற்றச் சாட்டுகளை நிச்சயமாகவும் காரணங்காட்டி விளக்க முடியும்.

பிரிட்டிஷ், ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளுக்கிடையிலான ஒரு தனிப்பட்ட சமாதானம் ஏற்படுவதைக் கட்டாயம் தடுக்க வேண்டும், தடுக்க முடியும். ஆனால் மிகவும் விரைவாகச் செயல்படுவதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தள்ளாட்டங்களைக் கண்டு மக்கள் சோர்வடைந்து விட்டார்கள். தலைமை நகரங்களில் நாம் பெறும் வெற்றி மூலம் மட்டுமே நாம் விவசாயிகளைக் கூட அழைத்துச் செல்ல முடியும்.

* * *

இப்போது நாம் புரட்சி எழுச்சியின் ''நாளை'' அல்லது ''தருணத்தைக்'' குறித்து (அச்சொல்லின் குறுகிய அர்த்தத்தில்) அக்கறை கொள்ளவில்லை. அது தொழிலாளர்கள், படைவீரர்களுடன், மக்கள் திரளுடன் தொடர்பு பூண்டுள்ள அவர்களது பொது விருப்பத்தால் மட்டுமே முடிவு செய்யப்படும்.

இங்கு முக்கியமானது என்னவென்றால், ஜனநாயக மாநாட்டில் இப்போது நமது கட்சி உள்ளபடியே தனது சொந்தக் காங்கிரசைக் கொண்டிருக்கிறது. இந்தக் காங்கிரஸ் (அது விரும்பினாலும் விரும்பா விட்டாலும்) புரட்சியின் கதியைக் கட்டாயம் முடிவு செய்ய வேண்டும்.

கட்சிக்கு இந்தக் கடமையைத் தெளிவாக எடுத்துக் காட்ட வேண்டுவது இங்கு முக்கியமானது. இன்றுள்ள கடமை பெத்ரோகிராதில், மாஸ்கோவில் (அதன் பிராந்தியம் உட்பட) ஓர் ஆயுதமேந்திய புரட்சி எழுச்சியைக் கொண்டு வருவது, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவது, அரசாங்கத்தை வீழ்த்துவது என்பதாக இருக்க வேண்டும். பத்திரிகைகளில் இந்தளவுக்குப் பகிரங்கமாகக் கூறாமல், இதற்காக எவ்வாறு கிளர்ச்சி செய்வது என்பது குறித்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

''புரட்சி எழுச்சி என்பது ஒரு கலை''[5] என்ற புரட்சி எழுச்சி பற்றிய மார்க்சின் சொற்களையும் இதரவற்றையும் நாம் நினைவில் கொண்டு மதிப்பிட வேண்டும்.

* * *

போல்ஷிவிக்குகளுக்குச் ''சம்பிரதாயமான'' பெரும்பான்மை கிடைப்பதற்குக் காத்திருப்பது என்பது வெகுளித்தனம்: எந்தப் புரட்சியும் அதற்காக என்றுமே காத்திராது. கேரென்ஸ்கி வகையறாக்கள் காத்துக் கொண்டிருக்கவில்லை, அவர்கள் பெத்ரோகிராதைச் சரணடையச் செய்யத் தயாராகி வருகிறார்கள். ''ஜனநாயக மாநாட்டின்'' கடைகெட்ட தள்ளாட்டங்கள் நிச்சயமாகவும் பெத்ரோகிராத், மாஸ்கோ தொழிலாளர்களின் பொறுமையை வெறுமையாக்கி விடும்! நாம் இப்போது ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்ளா விட்டால் வரலாறு நம்மை மன்னிக்காது.

பொறியமைவு இல்லையே? பொறியமைவு இருக்கிறது —சோவியத்துகளும் ஜனநாயக அமைப்புகளும். உடனடியாக இப்போது, பிரிட்டிஷாருக்கும் ஜெர்மானியருக்கும் இடையே தனிப்பட்ட சமாதானம் ஏற்படவிருக்கும் இந்தத் தறுவாயில் சர்வதேச நிலைமை நமக்குச் சாதகமாக இருக்கிறது. தேசங்களுக்கு உடனடி இப்போதே சமாதானத்தை பிரேரேபிப்பது என்பது வெற்றிக்கு வகை செய்யும்.

மாஸ்கோவிலும் பெத்ரோகிராதிலும் ஒருங்கே உடனடியாக ஆட்சி அதிகாரம் மேற்கொள்வது மூலம் (எது முதலில் வரும் என்பது முக்கியமில்லை, மாஸ்கோவில் துவங்குவது சாத்தியம்) நாம் முழுமையாகவும், மறுக்கவொண்ணா வகையிலும் வெற்றி பெறுவோம்.

நி. லெனின்

*1917 செப்டெம்பர் 12—14 (25—27)இல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு, தொகுதி 34, பக்கங்கள் 239—241

# மார்க்சியமும் புரட்சி எழுச்சியும்

## ரு. ச. ஜ. தொ. (போல்ஷிவிக்குகள்) கட்சியின் மத்தியக் கமிட்டிக்கு ஒரு கடிதம்

*ஆதிக்கமுள்ள ''சோஷலிஸ்டுக்'' கட்சிகள் மிக விஷமத் தனமாகக் கையாண்டும், பெரும்பாலும் மிகப் பெருமளவு விரிவாகப் பரப்பியும் வரும் மார்க்சியம் பற்றிய புரட்டுகளில் ஒன்று, புரட்சி எழுச்சிக்கான தயாரிப்பும், பொதுவாக புரட்சி எழுச்சியை ஒரு கலை யாகக் கருதி வருவதும் ''பிளான்கிவாதம்'' என்று கூறும் சந்தர்ப்பவாதப் பொய்யேயாகும்.*

*சந்தர்ப்பவாதத்தின் தலைவரான பெர்ன்ஷ்டைன் மார்க்சியத்தை பிளான்கிவாதம் என்று குற்றம் சாட்டியது மூலம் ஏற்கெனவே அவப்பேறான புகழைப் பெற்றிருந் தார். நமது இன்றைய சந்தர்ப்பவாதிகள் பிளான்கிவாதம் என்று கூக்குரலிடுவது மூலம் பெர்ன்ஷ்டைனின் அற்பமான ''கருத்துகளைக்'' கிஞ்சிற்றும் மேம்படுத்தவோ அல்லது ''செழுமைப்பாடுத்தவோ'' இல்லை.*

*புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருதுகிறார்கள் என்பதால் மார்க்சியவாதிகள் மீது பிளான்கிவாதம் என்று கூறிக் குற்றம் சாட்டப்படுகிறது! மார்க்ஸ் இந்த விஷயத் தில் மிகவும் திட்டவட்டமாக, துல்லியமாக, ஐயத்திற் கிடமற்ற தன்மையில் தமது கருத்தை வெளியிட்டுள்ளார், புரட்சி எழுச்சியைக் குறிப்பாக ஒரு* **கலை** *என்று குறிப் பிட்டு அது ஒரு கலையாகக் கட்டாயம் கருதப்பட வேண் டும் என்றும் முதல் வெற்றியை நீங்கள்* **போராடி அடைய** *வேண்டும் பிறகு வெற்றியிலிருந்து வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும், எதிரியின் குழப்பத்தைச் சாதகமாக எடுத்துக் கொண்டு, எதிரியை எதிர்த்த* **தாக்குதலை** *என்றுமே நிறுத்தி விடக் கூடாது என்றும் கூறியுள்ளார் என்பதை ஒரு மார்க்சியவாதி எவரும் மறுக்க மாட்டார்*

என்றிருக்கும் பொழுது இதை விட உண்மையைப் படு மோசமாகப் புரட்டும் செயல் வேறுண்டா?

புரட்சி எழுச்சி வெற்றிக்கு வழிவகுக்க வேண்டுமானால் அது சதியாலோசனை மீதோ மற்றும் ஒரு கட்சியையோ நம்பிச் சார்ந்திருக்கக் கூடாது, மாறாக முன்னேற்றமான வர்க்கத்தின் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். இதுவே முதல் நிபந்தனை. புரட்சி எழுச்சி மக்களின் புரட்சிகர கிளர்ச்சியைச் சார்ந்திருக்க வேண்டும். இது இரண்டாவது நிபந்தனை. புரட்சி எழுச்சி வளர்ந்து வரும் புரட்சியின் வரலாற்றின் திரும்பு முனையைச் சார்ந்திருக்க வேண்டும், அப்பொழுது மக்களின் முன்னேற்றமான அணிகளின் செயல்பாடு அதன் உச்சத்தில் இருக்கும், எதிரியின் அணிகளிலும் புரட்சியின் பலவீனமான அரை மனது மற்றும் உறுதியற்ற நண்பர்களின் அணிகளிலும் ஊசலாட்டங்கள் மிக வலுவாக இருக்கும். இது மூன்றாவது நிபந்தனை. புரட்சி எழுச்சி பற்றிய பிரச்சினையை எழுப்புவதற்கான இந்த மூன்று நிபந்தனைகளும் மார்க்சியத்தை பிளான்கிவாதத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றன.

ஆயினும் இந்த நிபந்தனைகள் நிலவும் போது, புரட்சி எழுச்சியை ஒரு *கலையாகக் கருத மறுப்பது மார்க்சியத்திற்குத் துரோகம் செய்வதாகும், புரட்சிக்குத் துரோகம் செய்வதாகும்.

நிகழ்ச்சிகளின் முழுமையான போக்கும், புரட்சி எழுச்சியை நாள் நிகழ்ச்சி நிரலில் புறநிலை நோக்கில் வைத்திருக்கும் ஒரு தருணம் குறிப்பாகவும் இன்றைய தருணமே. இதைக் கட்சி கட்டாயம் உணர வேண்டும் என்பதையும், புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருத வேண்டும் என்பதையும் எடுத்துக் காட்ட ஒப்புநோக்கும் முறையைப் பயன்படுத்துவதும், ஜூலை 3—4[6] செப்டெம்பர் நாட்களுக்கிடையேயான வேறுபாட்டை ஆய்வு செய்வதும் சிறப்பானதாக இருக்கும்.

ஜூலை 3—4இல் செய்ய வேண்டிய சரியான காரியம் ஆட்சி அதிகாரத்தை மேற்கொள்வதே என்று உண்மையை மீறாமல், வாதிட்டிருக்க முடியும், காரணம் நமது விரோதிகள் நம்மை எப்படியும் புரட்சி எழுச்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தி, நம்மைக் கலகக்காரர்களாக இரக்கமின்றி நடத்தியிருப்பார்கள். எனினும் இந்தக்

காரணத்தால் அந்த நேரத்தில் ஆட்சி அதிகாரத்தை மேற் கொள்ள ஆதரவாக முடிவு செய்வது தவறாக இருந் திருக்கும், புரட்சி எழுச்சியின் வெற்றிக்கான புறவய நிலைமைகள் அன்று இருக்கவில்லை.

1) புரட்சியின் முன்னணிப் படையான வர்க்கத்தின் ஆதரவு இன்னும் நமக்கு இருக்கவில்லை.

பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோவின் தொழிலாளர் கள் மற்றும் படைவீரர்களிடையே பெரும்பான்மையினர் இன்னும் நம் பக்கம் இருக்கவில்லை. இப்போது நமக்கு இரண்டு சோவியத்துகளிலும் பெரும்பான்மை இருக் கிறது. இது முற்றிலும் ஜூலை, ஆகஸ்ட் வரலாற்றாலும், போல்ஷிவிக்குகள் ''இரக்கமற்ற முறையில் நடத்தப் பட்டதால்'' ஏற்பட்ட அனுபவத்தாலும், கர்னீலவ் கலகத்தின்[7] அனுபவத்தாலும் உருவாக்கப்பட்டது.

2) அந்த சமயத்தில் நாடு தழுவியதான புரட்சி கிளர்ச்சி இல்லை. கர்னீலவ் கலகத்திற்குப் பிறகு இப் போது இருக்கிறது; மாகாணங்களிலுள்ள நிலைமையும், பல இடங்களில் சோவியத்துகள் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்திருப்பதும் இதை நிரூபிக்கின்றன.

3) அந்த சமயத்தில் எமது விரோதிகளிடையிலும், உறுதியற்ற குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினரிடையிலும் எந்தவொரு முனைப்பான அரசியல் அளவுக்கும் ஊசலாட் டம் இருக்கவில்லை. இப்போது ஊசலாட்டம் மிகப் பெரிய அளவில் இருக்கிறது. நமது பிரதான விரோதி— ''கூட்டணி நாடுகள்'' மற்றும் உலக ஏகாதிபத்தியம் (உலக ஏகாதிபத்தியத்திற்குக் ''கூட்டணி நாடுகள்'' தலைமை தாங்குகின்றன)—வெற்றிகரமான முடிவு வரை போரை நடத்துவது, அல்லது ருஷ்யாவுக்கு எதிராக தனிப்பட்ட ஒரு சமாதானம் செய்து கொள்வது என்ப வற்றுக்கிடையே **ஊசலாடத் தொடங்கியுள்ளது.** மக் களிடையே பெரும்பான்மையைத் தெளிவாக இழந்து விட்ட எமது குட்டி முதலாளித்துவ ஜனநாயகவாதிகள், மிகப் பெருமளவுக்கு ஊசலாடத் தொடங்கியுள்ளனர், காடேட்டுகளுடனான[8] கூட்டணியை, அதாவது ஒரு கூட்டாட்சியை அவர்கள் நிராகரித்து விட்டார்கள்.

4) எனவே ஜூலை 3—4இல் புரட்சி எழுச்சி என்பது தவறாக இருந்திருக்கும்: நாம் ஆட்சி அதிகாரத்தைப்

புலப்படும் வகையிலும் அரசியல் முறையிலும் நீடித்து வைத்திருக்க முடியாது. சில சமயங்களில் பெத்ரோகிராத் நமது கரங்களில் இருந்த போதிலும் அதை நாம் புலப்படும் வகையில் நீடித்து வைத்திருக்க முடியவில்லை, காரணம் அந்த சமயத்தில் நமது தொழிலாளர்களும் படைவீரர்களும் பெத்ரோகிராதுக்காகப் போராடி உயிரிழந்திருக்க மாட்டார்கள். கேரென்ஸ்கிகள், தெஸெரெத்தேலிகள் மற்றும் செர்னோவ்கள் மீது அந்த சமயத்தில் அந்த ''கொடூரத் தன்மை'' அல்லது மூர்க்கமான பகைமை இருக்கவில்லை. சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் பங்கேற்ற அடக்குமுறை அனுபவத்தால் நம்மவர்கள் இன்னமும் உறுதியடையவில்லை.

ஜூலை 3—4இல், அரசியல் முறையில் நாம் ஆட்சி அதிகாரத்தை நீடித்து வைத்திருந்து இருக்க முடியாது, காரணம் கர்னீலவ் கலகத்திற்கு முன்னால் சேனையும் மாகாணங்களும் பெத்ரோகிராதை எதிர்த்து அணிவகுத்துச் செல்லக் கூடும், சென்றிருக்க முடியும்.

இப்போது சித்திரம் முற்றிலும் வேறாக உள்ளது.

நமக்கு ஒரு வர்க்கத்தின் பெரும்பான்மையினரது ஆதரவு, புரட்சியின் முன்னணிப் படையின், மக்களின் முன்னணிப் படையின் ஆதரவு இருக்கிறது. அது மக்களைத் திரட்டிச் செல்லும் ஆற்றல் கொண்டது.

நமக்கு மக்களில் பெரும்பான்மையினரது ஆதரவு இருக்கிறது, காரணம் செர்னோவின் ராஜினாமா, இது விவசாயிகள் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கூட்டணியிடமிருந்தோ (சோஷலிஸ்டு-புரட்சியாளர்களிடமிருந்தோ) நிலத்தைப் பெற மாட்டார்கள். என்பதற்கான ஒரே அடையாளமல்லாவிடினும் மிகவும் எடுப்பான தெளிவான அடையாளமாகும். இதுவே புரட்சியின் பொது ஜன ஆதரவுத் தன்மைக்குப் பிரதான காரணம்.

ஏகாதிபத்தியம் முழுவதும் மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் கூட்டணி முழுவதும் நம்புதற்கரிய விசித்திரமான பாணியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் ஒரு சமயத்தில் எந்த வழியில் செல்வது என்பதை நிச்சயமாக அறிந்துள்ள ஒரு கட்சியின் சாதகமான நிலைமையில் நாம் இருக்கிறோம்.

நமது வெற்றி உறுதிப்பட்டுள்ளது, காரணம் மக்கள்

முழுமையாகப் பொறுமை இழந்து விட்டார்கள், எல்லா மக்களுக்குமான உறுதியான மீள்வழியை நாம் காட்டுகிறோம்; ''கர்னீலவ் நாட்களில்'' நமது தலைமையின் மதிப்பை மக்கள் அனைவருக்கும் எடுத்துக் காட்டினோம், கூட்டணி அரசியல்வாதிகளிடம் ஒரு சமரசத்திற்கான யோசனைகளை முன்மொழிந்தோம், அவர்களது ஊசலாட்டத்தில் எவ்விதக் குறைவும் இல்லாவிடினும் அவற்றை (யோசனைகளை) அவர்கள் நிராகரித்தார்கள்.

நமது சமரச யோசனை இதுவரை நிராகரிக்கப்படவில்லை என்றும், ஜனநாயக மாநாடு அதை இன்னும் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் நினைப்பது மாபெருந் தவறாகும். இந்தச் சமரச யோசனை ஒரு கட்சியால் கட்சிகளிடம் முன்மொழியப்பட்டது; இது வேறு எந்த வழியிலும் முன்மொழியப்பட்டிருக்க முடியாது. அது கட்சிகளால் நிராகரிக்கப்பட்டது. ஜனநாயக மாநாடு ஒரு மாநாடு என்பது தவிர வேறு எதுவுமல்ல. ஒரு விஷயத்தை மறந்து விடக் கூடாது: அதாவது, பெரும்பான்மையான புரட்சிகர மக்கள்—வெறுப்படைந்த ஏழை விவசாயிகள்—இதில் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கவில்லை. இது மக்களில் சிறுபான்மையினரின் மாநாடு ஆகும். இந்தக் கண்கூடான உண்மையை மறந்து விடக் கூடாது. ஜனநாயக மாநாட்டை ஒரு நாடாளுமன்றம் என்று நாம் கருதுவோமானால் அது பெருந் தவறாகும், அது நமது நாடாளுமன்ற மூடத்தனத்தையே அறவே காட்டுகிறது; அது தன்னைத் தானே புரட்சியின் ஒரு நிரந்தரமான சர்வசுதந்திர நாடாளுமன்றம் என்று பறை சாற்றிக் கொண்டாலும் கூட அது எதையும் முடிவு செய்ய முடியாது. முடிவு செய்யும் அதிகாரம் அதற்கு வெளியே, பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோ தொழிலாளி வர்க்க குடியிருப்பு வட்டாரங்களில் அமைந்திருக்கிறது.

எமக்கு முன்னால் வெற்றிகரமான புரட்சிகரமான எழுச்சிக்கான, எதார்த்த நிலைமைகள் அனைத்தும் உள்ளன. உலகிலேயே மிகவும் வேதனையானதும் மக்களை சலிப்புக் குள்ளாக்கி விட்டதுமான ஊசலாட்டத்திற்குப் புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றி மட்டுமே முடிவு கட்ட முடியும், புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றி மட்டுமே விவசாயிகளுக்கு உடனடியாக நிலம் வழங்கும்,

இதற்கான நிலைமையின் தனிச் சிறப்பு வாய்ந்த சாதகம் நமக்கு இருக்கிறது. புரட்சி எழுச்சியில் நாம் பெறும் வெற்றி மட்டுமே புரட்சிக்கு எதிராக முடுக்கப்படும் தனியான சமாதானம் என்ற சூழ்ச்சியைத் தோற்கடிக்கும், முழுமையான மேலும் நீதியான மேலும் முன்னதான சமாதானத்தை, புரட்சிக்கு அனுகூலமான ஒரு சமாதானத்தைப் பகிரங்கமாகப் பிரேரணை செய்வது மூலம் இதைத் தோற்கடிக்கும்.

இறுதியாக, நமது கட்சி மாத்திரமே வெற்றிகரமான புரட்சி எழுச்சி மூலம் பெத்ரோகிராதைப் பாதுகாக்க முடியும்; ஏனென்றால் சமாதானத்திற்கான நமது யோசனை நிராகரிக்கப்படுமானால், நாம் ஒரு போர்நிறுத்தத்தைக் கூட நாடிப் பெற முடியவில்லையானால், அதன் பின் நாம் ''பாதுகாப்புவாதிகள்'' ஆகி விடுவோம், போர்க் கட்சிகளின் தலைமையில் நாம் இருப்போம், நாமே மிக மேம்பட்ட ''போர்க்'' கட்சியாகி விடுவோம், போரை உண்மையிலேயே புரட்சி முறையில் நடத்துவோம். முதலாளிகளிடமிருந்து எல்லா ரொட்டிகளையும் (உணவையும்) காலணிகளையும் பறித்து எடுத்துக் கொள்வோம். அவர்களுக்கு ரொட்டிப் பொருக்குகளை மட்டுமே விட்டு வைத்து மரப்பட்டைக் காலணிகளை அணிவிப்போம். எல்லா உணவையும் காலணிகளையும் போர் முனைக்கு அனுப்பி வைப்போம்.

அதன் பின் நாம் பெத்ரோகிராதைப் பாதுகாப்போம்.

ருஷ்யாவில் உண்மையிலேயே ஒரு புரட்சிகரப் போரை நடத்துவதற்கான பொருளாயத, ஆன்மிக இரு வகை மூல வளங்களும் இன்னும் அளவற்றதாக இருக்கின்றன; ஜெர்மானியர் நமக்குக் குறைந்த பட்சம் போர் நிறுத்தத்தையாவது அனுமதிப்பார்கள் என்பதற்கான வாய்ப்புகள் நூறுக்குத் தொண்ணூற்றியொன்பது இருக்கிறது. தற்போது ஒரு போர்நிறுத்தத்தை உறுதியாகப் பெறுவது உலகம் முழுவதையும் வென்று பெறுவதாகும்.

* * *

புரட்சியைப் பாதுகாக்கவும், இரு கூட்டணிகளையும் சேர்ந்த ஏகாதிபத்தியவாதிகளும் ''தனித்தனியாக''

துண்டாட விடாமல் ருஷ்யாவைப் பாதுகாக்கவும் பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோ தொழிலாளர்களின் புரட்சிகரமான எழுச்சி முற்ற முழு அவசியம் என்பதைக் கண்டுணர்ந்து விட்ட நாம், முதலில் வளர்ந்து வரும் புரட்சி எழுச்சியின் நிலைமைகளுக்கு ஏற்ப மாநாட்டில் நமது அரசியல் போர்த்தந்திரங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும்; இரண்டாவதாக புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருத வேண்டும் என்ற மார்க்சின் கருத்தை நாம் சொல்லளவோடு மட்டும் ஏற்கவில்லை என்பதைக் காட்ட வேண்டும்.

மாநாட்டில் ஆள் தொகையைத் தேடித் திரியாமல், ஊசலாட்டக்காரர்களை ஊசலாட்டக்காரர் முகாமிலேயே விட்டு வைக்க அஞ்சாமல் நாம் உடனடியாக போல்ஷிவிக் குழுவை உறுதியாக இணைக்க வேண்டும். ஊசலாட்டக்காரர்கள் உறுதியான பற்றார்வமுள்ள போராட்ட வீரர்கள் முகாமில் இருப்பதை விட அங்கேயே இருப்பது புரட்சி லட்சியத்திற்கு அதிகப் பயனுடையதாக இருக்கும்.

நீண்ட பிரசங்கங்களின், பொதுவான ''பிரசங்கங்களின்'' ஒவ்வாத தன்மையை மிகவும் உறுதியான முறையில் வலியுறுத்தியும், புரட்சியைக் காக்க உடனடிப் போராட்டம் அவசியம் என்பதையும், முதலாளி வர்க்கத்துடன் முற்றாக முறித்துக்கொள்ள வேண்டுவதன் அடிப்படை அவசியத்தையும், இன்றுள்ள அரசாங்கத்தை முழுமையாக அகற்றி எறிவதற்கும், ருஷ்யாவை ''தனித் தனியாக'' துண்டாடுவதற்கு ஆயத்தம் செய்து வரும் ஆங்கில, பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகளுடன் பூரணமாக முறித்துக் கொள்ளவும் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தால் தலைமை தாங்கப்படும் புரட்சிகர ஜனநாயகவாதிகளிடம் உடனடியாக அனைத்து ஆட்சியதிகாரமும் மாற்றியளிக்கப்பட வேண்டும் என்பதையும் எல்லாம் வலியுறுத்தும் ஒரு சுருக்கமான பிரகடனத்தை போல்ஷிவிக்குகளிடமிருந்து உருவாக்கிப் பெற வேண்டும்.

மக்களுக்குச் சமாதானம், விவசாயிகளுக்கு நிலம், தகாத லாபங்களைப் பறிமுதல் செய்தல், உற்பத்தியை முதலாளிகள் இழிவான முறையில் சீர்குலைப்பதைத் தடை செய்தல் ஆகிய வேலைத்திட்டப் பிரேரணைகள் தொடர்பான இந்த முடிவு குறித்த மிகச் சுருக்கமான

மிகவும் கூரியதான வகை முறை விளக்கத்தை நமது பிர கடனம் வழங்க வேண்டும்.

இந்தப் பிரகடனம் எவ்வளவுக்கு எவ்வளவு மேலும் சுருக்கமானதாகவும் அதிகக் கூரியதாகவும் இருக்கிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு மேலும் நல்லது. வேறு இரண்டு உயர் முக்கியத்துவமுள்ள முடிவுகள் மட்டும் இதில் தெளி வாகச் சுட்டிக் காட்டப்பட வேண்டும், அதாவது, மக்கள் ஊசலாட்டங்களால் சலிப்படைந்திருக்கிறார்கள், சோஷ லிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகளின் உறுதியின்மையால் வெறுப்படைந்திருக்கிறார்கள்; அவர் கள் புரட்சிக்குத் துரோகம் செய்து விட்டனர், எனவே இந்தக் கட்சிகளிடமிருந்து திட்டவட்டமாக விலகி முறித்துக் கொள்கிறோம் என்பதே.

மற்றும் இன்னொரு விஷயம். பிரதேசக் கைப்பற்றல் கள் இல்லாத சமாதானத்தை உடனடியாக முன்வைப் பது மூலமும், கூட்டணி ஏகாதிபத்தியவாதிகளுட னும் எல்லா ஏகாதிபத்தியவாதிகளுடனும் உடனடியாக முறித்துக் கொள்வது மூலமும் ஒருக்கால் நாம் உடனே ஒரு போர்நிறுத்தத்தைப் பெறலாம், இல்லையேல் புரட்சிகரப் பாட்டாளி வர்க்கம் முழுதும் நாட்டைப் பாதுகாக்க ஒன்று திரளும், பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் புரட்சிகர ஜனநாயகவாதிகள் உண்மை யில் நீதியான, உண்மையில் புரட்சிகரமான போரைத் தொடுப்பார்கள்.

இந்தப் பிரகடனத்தைப் படித்த பிறகு, பேச்சு வேண் டாம் முடிவுகள் வேண்டும், தீர்மானம் எழுதுதல் வேண் டாம் செயல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த பின் நாம் நமது குழு முழுவதையும் ஆலைகளுக்கும் பாசறை களுக்கும் அனுப்ப வேண்டும். அதற்குரிய இடம் அங்கு தான், அங்குதான் வாழ்க்கையின் துடிப்பு இருக்கிறது, அங்குதான் நமது புரட்சியின் தாரகத்தின் மூலாதாரம் உள்ளது, அங்குதான் ஜனநாயக மாநாட்டின் இயக்கு சக்தி உள்ளது.

அங்கு, ஆர்வமிக்க, உணர்ச்சியான உரைகளில் நாம் நமது வேலைத்திட்டத்தை விளக்கி, ஒன்று, மாநாடு இதை முற்றிலுமாக ஏற்க வேண்டும் இல்லையேல் புரட்சிகரமான எழுச்சிதான் ஏற்படும் என்ற மாற்று யோசனையை

முன்வைக்க வேண்டும். நடுப்பாதை இல்லை. தாமதம் சாத்தியமல்ல. புரட்சி செத்துக் கொண்டிருக்கிறது.

பிரச்சினையை இந்த வழியில் முன்வைத்து, நமது குழு முழுவதையும் ஆலைகளிலும் பாசறைகளிலும் ஒரு முகப்படுத்துவது மூலம் நாம் புரட்சிகரமான எழுச்சியைத் துவக்குவதற்கான சரியான தருணத்தை நிர்ணயிக்க முடியும்.

புரட்சிகரமான எழுச்சியை மார்க்சிய வழியில், அதாவது ஒரு கலையாகக் கருத வேண்டுமானால் நாம் அதே சமயம் ஒரு விநாடியைக் கூட வீணாக்காமல் புரட்சிப் படைப் பிரிவுகளின் தலைமையகத்தை அமைக்க வேண்டும், நமது படைகளை விநியோகம் செய்ய வேண்டும், நம்பகமான படை அணிகளை மிகவும் முக்கியமான முனைகளுக்கு அனுப்ப வேண்டும், அலெக்சாண்டிரின்ஸ்கி அரங்கைச் சுற்றி வளைத்து பீட்டர்-பால் கோட்டையைக்[9] கைப்பற்றி இராணுவத் தலைமையையும் அரசாங்கத்தையும் கைது செய்து, எதிரி நகரின் கேந்திர முனைகளை அணுக இடந்தருவதை விட அழிவதே மேல் என்று கருதும் படைப் பிரிவுகளை ஐங்கர்களுக்கும்[10] கொடிய டிவிஷனுக்கும்[11] எதிராக அனுப்ப வேண்டும். ஆயுதமேந்திய தொழிலாளர்களை அணிதிரட்டி இறுதியான மூர்க்கமான போரில் போராடும் படியும், உடனே தந்தி தொலைபேசிச் செயலகங்களைக் கைப்பற்றுமாறும் அறைகூவல் விட வேண்டும். நமது புரட்சிகரமான எழுச்சித் தலைமையகத்தை மத்தியத் தொலைபேசிச் செயலகத்திற்கு மாற்றி, அதைத் தொலைபேசி மூலம் எல்லா ஆலைகள், எல்லாப் படைப் பிரிவுகள், ஆயுதந் தாங்கிப் போராடும் எல்லா முனைகள் ஆகியவற்றோடு தொடர்பு படுத்த வேண்டும், இன்ன பிற.

இன்றைய தருணத்தில் புரட்சி எழுச்சியை ஒரு கலையாகக் கருதாவிட்டால் மார்க்சியத்தின் பால் மெய்ப்பற்றுடன் இருப்பதோ, புரட்சியின் பால் மெய்ப்பற்றுடன் இருப்பதோ சாத்தியமல்ல என்ற உண்மையைச் சித்தரித்துக் காட்ட மட்டுமே இது உதாரணமாகக் காட்டப்பட்டது.

நி. லெனின்

*1917 செப்டெம்பர் 13—14 (26—27)இல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு, தொகுதி 34, பக்கங்கள் 242—247

# ஒரு பார்வையாளரின் ஆலோசனைகள்

நான் இந்த வரிகளை அக்டோபர் 8ந் தேதி எழுது கிறேன். இவை 9ந் தேதிக்குள் பெத்ரோகிராத் தோழர் களுக்குப் போய்ச் சேரும் என்ற நம்பிக்கை எனக்குக் கிஞ்சிற்றும் இல்லை. வடக்குப் பிராந்திய சோவியத்து களின் காங்கிரஸ் அக்டோபர் 10ந் தேதி நடைபெற இருப் பதால் இவை மிகவும் தாமதமாக வந்து சேரலாம். இருந்த போதிலும் பெத்ரோகிராத் மற்றும் அந்தப் ''பிராந்தி யம்'' முழுவதன் தொழிலாளர்கள் மற்றும் படைவீரர் கள் நடத்தவிருக்கும் போராட்டம், விரைவில் நடை பெறும் ஆனால் இன்னும் நடைபெறவில்லை என்று இருக் கும் பட்சத்தில், நான் எனது ''பார்வையாளரின் ஆலோ சனைகளை'' அளிக்க முயல்வேன்.

ஆட்சி அதிகாரம் அனைத்தும் சோவியத்துகளுக்கு மாற்றி வழங்கப்பட வேண்டும் என்பது தெட்டத் தெளி வானது. பாட்டாளிகளின் புரட்சிகர ஆட்சி அதிகாரம் (அல்லது போல்ஷிவிக் ஆட்சி அதிகாரம்—இப்போது இவை இரண்டும் ஒன்றே) பொதுவாக உலகம் முற்றிலும் குறிப்பாக, போரிடும் நாடுகளில் உள்ள எல்லா உழைக்கும் மக்கள், எல்லா சுரண்டப்படும் மக்கள் மற்றும் குறிப்பாக, ருஷ்ய விவசாயிகளின் உச்சபட்சமான அனுதாபத்தையும், தயக்கமற்ற ஆதரவையும் உறுதியாகப் பெற்றிருக்க வேண்டும் என்பதை எந்த போல்ஷிவிக்கும் மறுக்க முடி யாது. இந்த மிகவும் நன்கறியப்பட்ட, நீண்ட கால மாக நிலைநாட்டப்பட்டு விட்ட உண்மைகள் குறித்து விவரிக்கத் தேவை இல்லை.

சோவியத்துகளுக்கு இப்போது ஆட்சி அதிகாரத்தை மாற்றி வழங்குவது என்பது ஆயுதமேந்திய எழுச்சி என்றே பொருள்படும் என்பது எல்லாத் தோழர்களுக்கும் முற்றி லும் தெளிவாகப் புரிகிறதா என்ற விஷயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். இது கண்கூடானதாகத் தோன்ற

லாம், ஆனால் எல்லோரும் இந்த அம்சம் குறித்துச் சிந்தனை செலுத்தியிருந்தார்கள் அல்லது சிந்தனை செலுத்தி வருகிறார்கள் என்று கூற முடியாது. இப்போது ஆயுதமேந்திய எழுச்சியைத் தள்ளுபடி செய்வது, போல்ஷிவிசத்தின் கேந்திர கோஷம் (எல்லா ஆட்சி அதிகாரமும் சோவியத்துகளுக்கே) மற்றும் பொதுவாக பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர சர்வதேசியவாதத்தைத் தள்ளுபடி செய்வதாகவே பொருள்படும்.

ஆனால் ஆயுதமேந்திய எழுச்சி அரசியல் போராட்டத்தின் ஒரு **விசேஷ** வடிவமாகும், விசேஷ விதிகளுக்குக் கட்டுப்பட்டதாகும், இதைக் குறித்துக் கவனமாகச் சிந்தித்தல் வேண்டும். **''போரைப் போலவே அந்த அளவுக்கு முழுமையாகப் புரட்சிகரமான எழுச்சியும் ஒரு கலையாகும்''** என்று எழுதிய போது கார்ல் மார்க்ஸ் இந்த உண்மையையே தனிச்சிறப்புடைய துலக்கத்துடன் வெளியிட்டார்.

இந்தக் கலையின் முக்கியமான விதிகள் என்ற முறையில், மார்க்ஸ் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்:

1) புரட்சி எழுச்சியுடன் என்றுமே **விளையாட வேண்டாம்,** ஆனால் அதைத் துவங்கும் போது நீங்கள் **கடைசி வரையில் செல்ல வேண்டும்** என்பதை உறுதியாக உணர்ந்திருக்க வேண்டும்.

2) தீர்மானகரமான முனையில், தீர்மானகரமான தருணத்தில் **மாபெரும் வலுமிக்க சக்திகளை** ஒரு முனைப்படுத்த வேண்டும். இல்லையேல், மேலும் நல்ல ஆயத்தங்களும் ஒழுங்குத் திரட்சியும் கொண்ட விரோதி கலகக்காரர்களை அழித்து விடுவான்.

3) புரட்சி எழுச்சி தொடங்கி விட்டது என்றால், நீங்கள் மிகப் பெரிய **வைராக்கியத்துடன்** செயல்பட வேண்டும். தவறாமல் எல்லா வழிகளிலும் **எதிர்த்தாக்குதலை** மேற்கொள்ள வேண்டும். ''தற்காப்புப் போக்கு ஆயுதமேந்திய எழுச்சி அனைத்தின் மரணமாகும்.''

4) நீங்கள் எதிரி மீது திடீர்த் தாக்குதல் தொடுக்க முயல வேண்டும், அவனது படைபலம் சிதறிக்கிடக்கும் தருணத்தைப் பற்றிக் கொள்ள வேண்டும்.

5) எவ்வளவு சிறியதாக இருப்பினும் சரி **நாள்தோறுமான** வெற்றிகளுக்காக (ஒரு நகரம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் மணிக்கு மணி என்று சொல்லலாம்) நீங்கள்

பாடுபட வேண்டும். "தார்மீக மேல் நிலையை" எப்பாடு பட்டும் நீடித்து வைத்திருக்க வேண்டும்.

இதுகாறும் "உலகமறிந்துள்ள புரட்சிகரப் போர்த் தந்திரங்களின் மாபெரும் விற்பன்னரான டன்தோனின் 'துணிச்சல், துணிச்சல், மேலும் துணிச்சல்' "[12] என்னும் சொற்களால் ஆயுதமேந்திய எழுச்சி சம்பந்தமாக எல்லாப் புரட்சிகளின் படிப்பினைகளையும் மார்க்ஸ் தொகுத்தளித்தார்.

ருஷ்யாவில், 1917 அக்டோபரில் இதைப் பிரயோகம் செய்தால் அதன் பொருள்: எவ்வளவு சடுதியாகவும் எவ்வளவு வேகமாகவும் சாத்தியமோ அது போன்ற ஒரே சமயத்தில் பெத்ரோகிராத் மீது எதிர்த்தாக்குதல், இது உள்ளே இருந்தும் வெளியில் இருந்தும் தவறாமல் தொடுக்கப்பட வேண்டும். தொழிலாளி வர்க்க வட்டாரங்களில் இருந்தும், பின்லாந்தில் இருந்தும், ரெவெலில் இருந்தும், கிரோன்ஷ்டாத்தில் இருந்தும் தொடுக்கப்பட வேண்டும். கடற்படை முழுவதன் எதிர்த்தாக்குதல், நமது "பூர்ஷ்வா காவற்படை" (ஜங்கர்கள்), நமது "வாந்தே துருப்புகள்" (கஸாக்கு படையின் பகுதி)[13] இத்தியாதிகளின் 15,000 அல்லது 20,000 (ஒருவேளை மேலும் அதிகம்) பேரின் மீது படை பலத்தின் மாபெரும் மேலாதிக்கத்தை ஒரு முனைப்படுத்தல் என்பதாகும்.

நமது மூன்று பிரதான சக்திகளான கடற்படை, தொழிலாளர்கள், சேனைப் பிரிவுகளைத் தக்கபடி இணைத்து, அவை பின்வருவனவற்றை எப்பாடுபட்டும் தவறாது பற்றிப் பிடித்து விடாது வைத்திருக்க வகை செய்ய வேண்டும்: (அ) தொலைபேசி இணைப்பகம், (ஆ) தந்தி அலுவலகம், (இ) ரயில்வே நிலையங்கள், (ஈ) எல்லாவற்றுக்கும் மேலாகப் பாலங்கள்.

மிகவும் உறுதியான நபர்கள் (நமது "அதிரடிப் படைகள்", இளம் தொழிலாளர், சிறந்த கடலோடிகள்) சிறிய படைப் பிரிவுகளாக அமைக்கப்பட்டு, மிகவும் முக்கியமான இடங்களைப் பிடித்தடக்கவும் எல்லா இடங்களிலும் எல்லா முக்கியமான செயல்பாடுகளிலும் பங்கு பற்றும்படி செய்தல் வேண்டும், உதாரணம்:

பெத்ரோகிராதைச் சுற்றிவளைத்துக் கொண்டு தொடர்புகளை வெட்டி விடுதல்; கடற்படையினர், தொழி

லாளர் மற்றும் துருப்புக்களின் கூட்டுத் தாக்குதல் மூலம் அதைக் கைப்பற்றல் — இந்தப் பணிக்குக் கலையும் மும்மடங்கு துடுக்கும் தேவை.

விரோதியின் ''மையங்களை'' (ஐங்கர் பள்ளிகள், தந்தி அலுவலகம், தொலைபேசி இணைவகம் ஆகியவற்றை) தாக்கி சுற்றிவிளைத்துக் கொள்ளும் நோக்கத்துடன் துப்பாக்கிகள், எறிகுண்டுகளை ஆயுதமாக ஏந்திய சிறந்த தொழிலாளர்களின் படைப் பிரிவுகளை அமைப்பது. அவர்களது கோட்பாட்டு வாசகம்: எதிரி முன்னேற இடம் கொடுப்பதை விட கடைசி மனிதன் வரை சாவது மேல்!—என்பதாக இருக்க வேண்டும்.

போராடுவது என்று முடிவு செய்யப்படுமானால் தலைவர்கள் டன்தோன் மற்றும் மார்க்சின் மாபெரும் கட்டளை வாசகங்களை வெற்றிகரமாகப் பிரயோகிப்பர் என்று நம்புவோமாக.

ருஷ்யப் புரட்சியின் வெற்றியும் உலகப் புரட்சியின் வெற்றியும் இந்த இரண்டு அல்லது மூன்று நாள் போராட்டத்தைச் சார்ந்திருக்கிறது.

1917 அக்டோபர் 8 (21)இல் எழுதப்பட்டது

நூல் திரட்டு, தொகுதி 34, பங்கங்கள் 382—384

# தோழர்களுக்குக் கடிதம்

தோழர்களே,

நாம் தீர்மானகரமான கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; சம்பவங்கள் நம்ப முடியாத அளவுக்கு வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே விதியின் சித்தத்தினால் வரலாற்றின் நீரோட்டத்திலிருந்து ஓரளவுக்கு ஒதுங்கிப் போன இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு கட்டுரையாளர் காலரீதியில் பின்தங்கி விடுகின்ற அல்லது சரியான தகவல்களைப் பெறவில்லை என்று நிரூபிக்கப்படுகின்ற ஆபத்துக்கு உள்ளாகக் கூடிய நிலையிலிருக்கிறார். அவருடைய எழுத்துகள் அச்சில் வெளியாவதற்குச் சற்றுக் காலதாமதமாகுமானால் இந்த ஆபத்து இன்னும் அதிகமாகும். நான் இதை முழுமையாக உணர்ந்தாலும் இது வெளியிடப்படாமற் போகலாம் என்ற ஆபத்து இருந்தாலும் நான் இந்தக் கடிதத்தை போல்ஷிவிக்குகளுக்கு எழுதுவது அவசியம். ஏனென்றால் எந்த ஊசலாட்டங்களை எதிர்த்து மிகத் தீர்மானமான முறையில் எச்சரிக்கை செய்வது என்னுடைய கடமை என்று கருதுகின்றேனோ அவை இதற்கு முன்பு எந்தக் காலத்திலும் இப்படி ஏற்பட்டதில்லை; கட்சியின் மீதும் சர்வதேசப் பாட்டாளி வர்க்க இயக்கத்தின் மீதும் புரட்சியின் மீதும் அவை ஆபத்தான விளைவை ஏற்படுத்தக் கூடும். காலரீதியில் அதிகமான அளவுக்குப் பின்தங்கி விடுகின்ற அபாயத்தைப் பொறுத்த வரை எனக்குக் கிடைத்திருக்கும் தகவலின் தன்மையையும் தேதியையும் சுட்டிக் காட்டுவதன் மூலம் அதைச் சமாளிக்கிறேன்.

அக்டோபர் 16, திங்கட்கிழமையன்று காலையில்தான் அதற்கு முந்திய தினத்தில் பெத்ரோகிராதில் நடைபெற்ற மிக முக்கியமான போல்ஷிவிக் கூட்டத்தில் கலந்து கொண்ட தோழர் ஒருவரை நான் பார்க்க முடிந்தது. அங்கே நடைபெற்ற விவாதத்தைப் பற்றி அவர் என்

னிடம் விரிவாக எடுத்துக் கூறினார். எல்லா அரசியல் போக்குகளையும் சேர்ந்த பத்திரிகைகள் ஞாயிற்றுக் கிழமை இதழ்களில் விவாதித்திருக்கும் அதே ஆயுதந்தாங்கிய எழுச்சிப் பிரச்சினைதான் அங்கும் விவாதிக்கப்பட்டது. அந்தக் கூட்டம் தலைநகரத்தில் போல்ஷிவிக் வேலையின் எல்லாத் துறைகளிலும் அதிகமான செல்வாக்குடைய எல்லாவற்றையும் பிரதிநிதித்துவப்படுத்தியது. அந்தக் கூட்டத்தில் மிகக் குறைவான சிறுபான்மையினர், அதாவது மொத்தத்தில் இரண்டு தோழர்கள் மட்டுமே, எதிர்மறையான நிலையெடுத்தார்கள். இந்தத் தோழர்கள் முன்வைத்த வாதங்கள் மிகவும் பலவீனமானவை, அவை நாம் அதிசயப்படுகின்ற அளவுக்குக் குழப்பம், கோழைத்தனம், போல்ஷிவிசம் மற்றும் பாட்டாளி வர்க்கப் புரட்சிகர சர்வதேசியவாதத்தின் பிரதான கருத்துகள் எல்லாவற்றின் வீழ்ச்சியின் வெளிப்பாடாக இருக்கின்றன; எனவேஇத்தகைய அவமானகரமான ஊசலாட்டங்களுக்கு ஒரு விளக்கத்தைக் கண்டுபிடிப்பது சுலபமல்ல. ஆனால் ஊசலாட்டம் இருக்கிறது. இவ்வளவு முக்கியமான ஒரு பிரச்சினையில் ஊசலாட்டங்களைச் சகித்துக்கொள்வதற்கு ஒரு புரட்சிகர கட்சிக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால், தங்களுடைய கோட்பாடுகளைக் காற்றிலே பறக்கவிட்ட இந்த இரு தோழர்களும் சற்றுக் குழப்பமேற்படுத்த முடியும் என்பதால் அவர்களுடைய ஊசலாட்டங்களை அம்பலப்படுத்துவதற்கும் அவை எவ்வளவு வெட்கக்கேடானவை என்பதைக் காட்டுவதற்கும் அவர்களுடைய வாதங்களைப் பகுத்தாராய்வது அவசியம். பின்வரும் வரிகள் இதைச் செய்யும் முயற்சியாகும்.

---

> ''...மக்களிடம் நமக்குப் பெரும்பான்மை கிடையாது; இந்த நிபந்தனை இல்லாமல் ஆயுதந்தாங்கிய எழுச்சி நம்பிக்கைக்கு இடமளிக்கவில்லை....''

இதைச் சொல்பவர்கள் உண்மையைத் திரித்துக் கூறுபவர்கள் அல்லது ஏட்டுப் பண்டிதர்கள். நாடு முழுவதிலும் போல்ஷிவிக் கட்சி சரியாகப் பாதி வாக்குகளும் அதற்கு மேல் ஒரு வாக்கும் பெற்றிருக்கிறதா என்று இவர்

கள் முன்கூட்டியே உத்தரவாதம் கேட்கிறார்கள். புரட்சியின் உண்மையான சந்தர்ப்பங்களைச் சிறிது கூடக் கணக்கெடுத்துக் கொள்ளாமல் எல்லா நிலைமைகளிலும் இந்த உத்தரவாதத்தைக் கேட்கிறார்கள். வரலாறு அத்தகைய உத்தரவாதத்தை ஒருபோதும் கொடுத்ததில்லை, எந்தப் புரட்சியிலும் அத்தகைய உத்தரவாதத்தைக் கொடுப்பதற்கு அதனால் சிறிதும் முடியாது. அப்படிப்பட்ட ஒரு கோரிக்கையை வைப்பது கூட்டத்திலிருப்பவர்களைக் கேலி செய்வதாகும். எதார்த்தத்திலிருந்து அவர்கள் விலகி ஓடுவதை மறைக்கின்ற திரை என்பதைத் தவிர அதில் வேறு ஒன்றுமில்லை.

ஏனென்றால் ஜூலை நாட்களுக்குப் பிறகுதான் மக்களில் பெரும்பான்மையினர் போல்ஷிவிக்குகளின் தரப்புக்கு வேகமாக வரத் தொடங்கினார்கள் என்பதை எதார்த்தம் நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. பெத்ரோகிராதில் ஆகஸ்ட் 20ஆம் நாளன்று நடைபெற்ற தேர்தல்கள் இதை முதன்முதலாக, கர்னீலவ் கலகத்துக்கும் முன்பே, எடுத்துக்காட்டின. அத்தேர்தலில் புறநகர்ப் பகுதிகளைச் சேர்க்காமலேயே நகரத்தில் போல்ஷிவிக் வாக்குகள் 20 சதவிகிதத்திலிருந்து 33 சதவிகிதமாக அதிகரித்தன. பிறகு செப்டெம்பரில் மாஸ்கோவில் நடைபெற்ற மாவட்ட கவுன்சில் (டூமா) தேர்தல்களும் இதை எடுத்துக்காட்டின. இந்தத் தேர்தலில் போல்ஷிவிக் வாக்குகள் 11 சதவிகிதத்திலிருந்து $49^1/_3$ சதவிகிதமாக உயர்ந்தன (நான் சமீபத்தில் பார்த்த ஒரு மாஸ்கோ தோழர் சரியான தகவல் 51 சதவிகிதம் என்று என்னிடம் கூறினார்). சோவியத்துகளுக்கு நடைபெற்ற புதிய தேர்தல்களும் இதை நிரூபித்தன. பெரும்பான்மையான விவசாய சோவியத்துகள்—அவர்களுடைய ''அவ்க்சேன்தியெவ்'' மத்திய சோவியத்தையும் மீறி—கூட்டணிக்கு எதிராகக் கருத்துத் தெரிவித்திருப்பது இதை நிரூபித்தது. கூட்டணிக்கு எதிராக இருப்பதென்றால் அது நடைமுறையில் போல்ஷிவிக்குகளைப் பின்பற்றுவதாகும். மேலும் படைவீரர்கள் சோஷலிஸ்டுபுரட்சியாளர் மற்றும் மென்ஷிவிக் தலைவர்கள்,இராணுவ அதிகாரிகள், பிரதிநிதிகள் இதரர்களின் வெறுப்பைக் கக்குகின்ற அவதூறுகள், தாக்குதல்க்ள் ஆகியவற்றை மீறி போல்ஷிவிக்குகளின் தரப்புக்கு

முன்பு எக்காலத்திலும் இல்லாத மாபெரும் உறுதியோடு கூட்டமாக வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் போர்முனையிலிருந்து வருகின்ற செய்திகள் முன்னைக் காட்டிலும் அடிக்கடியும் அதிகத் திட்டவட்டமாகவும் நிரூபிக்கின்றன.

கடைசியாக, இன்றைய ருஷ்ய வாழ்க்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க அம்சம் **விவசாயக் கலகமாகும்.** மக்கள் போல்ஷிவிக்குகளின் தரப்புக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இது எதார்த்த ரீதியில்—வார்த்தைகளில் அல்ல, செயலில்—எடுத்துக்காட்டுகிறது. கலவரத்தையும் அராஜகத்தையும் பற்றிக் கூச்சல் போடுகின்ற பூர்ஷ்வாப் பத்திரிகைகளும் ''ஊசலாடுகின்றன''. **நோவயா ஷிஸின்**[14] கூட்டத்தின் பரிதாபமிக்க அதன் ஆமாம் சாமிகளும் எவ்வளவு பொய் சொன்னாலும் கூட இதுதான் உண்மை. டம்போவ் குபெர்னியாவில் (மாநிலத்தில்) விவசாய இயக்கம் ஒரு ஆயுதந்தாங்கிய எழுச்சியாகும்—அதன் பொருளாயத மற்றும் அரசியல் ஆகிய இரண்டு அர்த்தங்களிலுமே. முதன்மையாக, விவசாயிகளுக்கு நிலத்தை மாற்றுவது பற்றிய உடன்பாடு போன்ற மிகவும் சிறந்த அரசியல் விளைவுகளை இது ஏற்படுத்தியிருக்கிறது. ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பற்றிப் பயமடைந்திருக்கும் சோஷலிஸ்டு-புரட்சியாளர் கும்பல் அனைத்தும் **(தியேலோ நரோதா**[15] உட்பட) விவசாயிகளுக்கு நிலத்தை மாற்றிக் கொடுப்பதன் அவசியத்தைப் பற்றி இப்பொழுது **பெருங்கூச்சல் போடுவது** காரணமில்லாமல் அல்ல. போல்ஷிவிசத்தின் சரியான தன்மைக்கும் அதன் வெற்றிக்கும் இது ஒரு **செய்முறை** விளக்கமாகும். முன் நாடாளுமன்ற போனபார்டிஸ்டுகளுக்கும் அவர்களுடைய கைக் கூலிகளுக்கும் எழுச்சியைத் தவிர வேறு எவ்விதமாகவும் ''கற்றுக் கொடுக்க'' முடியாது என்று **நிரூபிக்கப்பட்டது.**

இது ஒரு உண்மை. உண்மைகள் பிடிவாதம் கொண்டவை. எழுச்சிக்கு **ஆதரவாக** இத்தகைய உண்மையான ''வாதம்'' குழப்பமடைந்து பயந்து போன அரசியல்வாதியின் ஆயிரக்கணக்கான ''அவநம்பிக்கையான'' மழுப்பல்களைக் காட்டிலும் அதிகமான பலத்தைக் கொண்டதாகும்.

விவசாய எழுச்சி நாடு தழுவிய அளவில் அரசியல்

> ''ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற அள வுக்கு நம்மிடம் பலமில்லை; அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதைத் தடுப்பதற்கு முதலாளி வர்க்கத்துக்குப் போதுமான பலம் கிடையாது....''

இந்த வாதத்தின் முதற்பகுதி முன்னர் கொடுக்கப் பட்ட வாதத்தின் சாதாரணப் பொழிப்புரையே. அதன் ஆசிரியர்களுடைய குழப்பமும் முதலாளி வர்க்கத்தைப் பற்றிக் கொண்டிருக்கும் பயமும் தொழிலாளர்களைப் பற்றி அவநம்பிக்கையோடு முதலாளி வர்க்கத்தைப் பற்றி நம்பிக்கையோடும் எடுத்துக் கூறப்படும் பொழுது அது பலத்தையோ உறுதியான நம்பிக்கையின் வன்மையையோ பெறவில்லை. போல்ஷிவிக்குகளுக்கு எதிராகக் கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை போராடுவோம் என்று ஜங்கர்களும் கஸாக்குகளும் கூறினால் அது முழு மதிப் புக்குத் தகுதியுடையதாகிறது. ஆனால் தொழிலாளர் களும் படைவீரர்களும் நூற்றுக் கணக்கான கூட்டங் களில் போல்ஷிவிக்குகளிடம் தங்களுடைய முழு நம்பிக் கையைத் தெரிவித்து சோவியத்துகளுக்கு அதிகார மாற் றத்தைப் பாதுகாக்கத் தயாராக இருக்கிறோம் என்று உறுதியளித்தால், அப்பொழுது வாக்களிப்பது வேறு, சண்டை செய்வது வேறு என்று நினைவுபடுத்துவது ''பொருத்தமாகத்'' தோன்றுகிறது!

நீங்கள் இப்படி வாதாடினால் எழுச்சிக்கான சாத்தி யத்தை நீங்கள் ''மறுத்து விடுவது'' உண்மையே. எழுச்சி யின் தோல்வியை நோக்கிய, அதை நோக்கி உந்தித் தள்ளப்பட்ட இந்த ''அவநம்பிக்கை'' முதலாளி வர்க்கத் தின் தரப்பிற்கு அரசியல் ரீதியில் மாறுவதிலிருந்து எப்படி வேறுபடுகிறது என்று நாம் கேட்க விரும்புகிறோம்?

உண்மைகளைப் பாருங்கள், போல்ஷிவிக் பிரகடனங் களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். இவை ஆயிரக் கணக்கான தடவைகள் திருப்பிச் சொல்லப்பட்டவை, ஆனால் இப்பொழுது நம்முடைய அவநம்பிக்கைவாதிகள் இவற்றை ''மறந்து விட்டார்கள்''. தொழிலாளர் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் ஒரு பலம் பொருந்திய சக்தி, புரட்சியின் முன்னணிப் படை, அவை அதிகாரத்தை எடுத்துக்கொள்ள முடியும் என்று

முக்கியத்துவமுடைய சம்பவமாக இல்லாதிருக்குமானால் முன் நாடாளுமன்ற சோஷலிஸ்டு-புரட்சியாளர் கைக்கூலிகள் விவசாயிகளுக்கு நிலத்தைக் கொடுக்க வேண்டிய அவசியத்தைப் பற்றிப் பெருங்கூச்சல் போட மாட்டார்கள்.

டம்போவ் குபெர்னியாவில் ரயில் நிலையங்களில் தானிய ஒப்படைப்பு—ரபோச்சி புட் முன்பே சுட்டிக்காட்டியதைப் போல—விவசாயிகளுடைய எழுச்சியின் சிறப்பு மிக்க மற்றொரு அரசியல் மற்றும் புரட்சிகரமான விளைவாகும். 'குழப்பமடைந்திருக்கும் கனவான்களே! இதோ! உங்களுக்கு மற்றொரு ''வாதம்'', நம்முடைய கதவைத் தட்டிக் கொண்டிருக்கும் பஞ்சத்திலிருந்தும் இதுவரை கேள்விப்படாத பரிமாணங்களைக் கொண்ட நெருக்கடியிலிருந்தும் நாட்டைக் காப்பதற்கு ஆயுதந்தாங்கிய எழுச்சியே ஒரே வழி என்பதற்கு ஆதரவாக இன்னொரு வாதம். மக்களுக்கு துரோகம் செய்த சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் முணுமுணுப்பதும் பயமுறுத்துவதும் தீர்மானங்களை எழுதுவதும் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி பட்டினியால் வாடுகின்ற மக்களுக்கு உணவளிப்போம் என்று வாக்குறுதியளிப்பதுமாக இருக்கும் பொழுது மக்கள் நிலக்கிழார்கள், முதலாளிகள், வர்த்தகச் சூதாடிகள் ஆகியோரை எதிர்த்துக் கலகம் செய்வதன் மூலம் போல்ஷிவிக்குகளின் பாணியில் உணவுப் பிரச்சினையைத் தீர்க்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

பூர்ஷ்வாப் பத்திரிகைகள் கூட, ருஸ்கயா வோல்யா[16] கூட டம்போவ் குபெர்னியாவில் ரயில்வே நிலையங்களில் தானியம் குவிக்கப்படுகிறது என்று செய்தியை வெளியிட்டு உணவுப் பிரச்சினைக்கு இப்படிப்பட்ட தீர்வின் (இது ஒன்று மட்டுமே உண்மையான தீர்வு) அதிசயமான விளைவுகளை ஒத்துக் கொள்ளுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டது... விவசாயிகள் எழுச்சி செய்த பிறகுதான்!!

மக்களில் பெரும்பான்மையினர் போல்ஷிவிக்குகளைப் பின்பற்றி வருகிறார்கள், நிச்சயம் பின்பற்றுவார்கள் என்பதை இப்பொழுது சந்தேகிப்பது வெட்கக்கேடான ஊசலாட்டமாகும், நடைமுறையில் பாட்டாளி வர்க்கப் புரட்சிவாதத்தின் எல்லாக் கோட்பாடுகளையும் கைவிடுவதாகும், போல்ஷிவிசத்தை முழுமையாகக் கைகழுவுவதாகும்.

---

நாம் ஆயிரக்கணக்கான தடவைகள் சொல்லியிருக்கிறோம். மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் ''ஜனநாயகத்தின் முழு அதிகாரம் பெற்ற உறுப்புக்களைப்'' பற்றி அலங்காரமாகப் பேசுவதையும் ஆனால் சோவியத்துக்கு அதிகாரத்தை மாற்றுவதைக் குறித்து பயப்படுவதையும் பற்றி நாம் அவர்களை ஆயிரக்கணக்கான தடவைகள் கண்டனம் செய்திருக்கிறோம்.

கர்னீலவ் கலகம் எதை நிரூபித்திருந்தது? சோவியத்துகள் ஒரு உண்மையான சக்தி என்பதை அது நிரூபித்தது.

இப்பொழுது, இது அனுபவத்தால், உண்மைகளால் நிரூபிக்கப்பட்ட பிறகு நாம் போல்ஷிவிசத்தை மறுக்க வேண்டுமென்று, நம்மையே மறுத்துக்கொள்ள வேண்டுமென்று (பெத்ரோகிராத் மற்றும் மாஸ்கோ சோவியத்துகளும் மாகாண சோவியத்துகளில் பெரும்பான்மையும் போல்ஷிவிக்குகளின் தரப்பில் இருக்கும் பொழுது) நமக்குப் போதுமான பலம் இல்லையென்று சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது!!! இவை வெட்கக்கேடான ஊசலாட்டங்களில்லையா? உண்மையைச் சொல்வதென்றால் நம்முடைய ''அவநம்பிக்கைவாதிகள்'' ''எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கே!'' என்ற கோஷத்தைக் கைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் அதை ஒத்துக் கொள்வதற்கு அஞ்சுகிறார்கள்.

அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதைத் தடுப்பதற்கு முதலாளி வர்க்கத்துக்குப் போதுமான பலம் கிடையாது என்பதை எப்படி நிரூபிக்க முடியும்?

முதலாளி வர்க்கத்தைத் தூக்கியெறிவதற்கு சோவியத்துகளிடம் பலம் இல்லை என்றால் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதைத் தடுக்கின்ற அளவுக்கு முதலாளி வர்க்கம் பலமுடையது என்றுதான் அர்த்தம். ஏனென்றால் அதைத் தடுப்பதற்கு வேறு யாருமே கிடையாது. கேரென்ஸ்கி வகையறாக்களின் வாக்குறுதிகளை நம்புவது, அடிமைத்தனமான முன்னாள் நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை நம்புவது — பாட்டாளி வர்க்கக் கட்சியைச் சேர்ந்த ஒரு உறுப்பினருக்கு, புரட்சியாளருக்கு இது தகுமா?

இன்றைய அரசாங்கம் தூக்கியெறியப்படா விட்டால், அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதைத் தடுப்பதற்குப்

போதுமான பலம் முதலாளி வர்க்கத்துக்கு இருப்பதோடு மட்டுமல்லாமல் பெத்ரோகிராதை ஜெர்மானியர்களிடம் விட்டுவிடுவது, போர்முனையைத் திறந்து விடுவது, கதவடைப்புகளை அதிகரிப்பது, உணவுப் பொருள்களை ஒப்படைப்பதைத் தகர்ப்பது ஆகியவற்றின் மூலம் இதே விளைவை மறைமுகமாகச் சாதிக்க முடியும். முதலாளி வர்க்கம் ஏற்கெனவே இதைப் பகுதியளவுக்குச் செய்து கொண்டிருப்பது உண்மைகளால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அப்படியானால் தொழிலாளர்களும் படைவீரர்களும் அவர்களைத் தூக்கியெறியா விட்டால் அதை முழு அளவுக்குச் செய்ய அவர்களால் முடியும் என்றுதான் அர்த்தம்.

---

> "...அரசியல் நிர்ணய சபையைக் கூட்டு.... கர்னீலவ் சதிகள் அனைத்தையும் நிறுத்து என்ற கோரிக்கையோடு அரசாங்கத்தின் தலையில் குறி பார்த்து நீட்டப்பட்ட கைத்துப்பாக்கியாக சோவியத்துகள் இருக்க வேண்டும்...."

வருந்த வேண்டிய அவநம்பிக்கைவாதிகள் இருவரில் ஒருவர் இந்த அளவுக்குப் போய் விட்டார்!

அவர் இந்த அளவுக்குப் போக வேண்டியதே. ஏனென்றால் ஆயுதந்தாங்கிய எழுச்சியை நிராகரிப்பது "எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கே!" என்ற கோஷத்தை நிராகரிப்பதைப் போன்றதே.

ஒரு கோஷம் "புனிதமானதல்ல" என்பது உண்மையே. நாம் அனைவருமே அதை ஒத்துக்கொள்கிறோம். ஆனால் இந்த கோஷத்தை மாற்றுவதைப் பற்றிய பிரச்சினையை (ஜூலை நாட்களுக்குப் பிறகு நான் பிரச்சினையை எழுப்பிய அதே முறையில்) யாருமே எழுப்பாதது ஏன்? கட்சி செப்டெம்பர் மாதத்திலிருந்து ஆயுதந்தாங்கிய எழுச்சியைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறது, "எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கே!" என்ற கோஷம் நிறைவேற இன்றுள்ள ஒரே வழி இது தான். ஆகவே அதை பகிரங்கமாகச் சொல்ல பயப்படுவது ஏன்?

வருந்த வேண்டிய அவநம்பிக்கைவாதிகள் திரும்புவதற்கு வழியே இல்லை. ஆயுதந்தாங்கிய எழுச்சியைக்

கைவிடுவது சோவியத்துகளுக்குஆட்சியதிகாரத்தை மாற்று வதைக் கைவிடுவதே, அரசியல் நிர்ணய சபையைக் கூட்டு வதாக ''வாக்குறுதியளித்திருக்கும்'' அன்புமிக்க முதலாளி வர்க்கத்தினரிடம் எல்லா நம்பிக்கைகளையும் எதிர்பார்ப்புகளையும் ''மாற்றி விடுவதைக்'' குறிக்கிறது.

ஆட்சியதிகாரம் சோவியத்துகளிடம் வந்து விட்டால் அரசியல் நிர்ணய சபைக்கும் அதன் வெற்றிக்கும் உத்தரவாதமளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்வது அவ்வளவு கடினமானதா? இதை போல்ஷிவிக்குகள் ஆயிரக்கணக்கான தடவைகள் சொல்லியிருக்கிறார்கள். யாரும் எந்தக் காலத்திலும் இதை மறுக்க முயற்சித்ததில்லை. இவற்றின் ''இணைந்த தன்மையை'' எல்லோருமே அங்கீகரித்தார்கள். ஆனால் ''ஒன்றிணைந்த தன்மை'' என்ற வார்த்தைகளின் மறைவில் சோவியத்துகளுக்கான அதிகார மாற்றத்தைக் கைவிடுவதைக் கள்ளத்தனமாக நுழைப்பது, நம்முடைய கோஷத்தைப் பகிரங்கமாகக் கைவிடுவதற்குப் பயப்படும் பொழுது அதை இரகசியமாக உள்ளே கொண்டுவருவது—இது என்ன? இதை வர்ணிக்க நாடாளுமன்றச் சொல் ஏதேனும் உண்டா?

''அது தோட்டா இல்லாத கைத்துப்பாக்கியா?'' என்று யாரோ நம்முடைய அவநம்பிக்கைவாதியிடம் கூர்மையாகக் கேட்டிருக்கிறார். அப்படியானால் அதற்கு லீபெர்டான்களிடம்[17] நேரடியாகப் போய்ச் சேர்ந்து விடுவதென்று அர்த்தம். அவர்கள் சோவியத்துகளைக் ''கைத்துப்பாக்கி'' என்று ஆயிரக்கணக்கான தடவைகள் சொல்லி விட்டார்கள், மக்களையும் ஆயிரக்கணக்கான தடவைகள் ஏமாற்றி விட்டார்கள். ஏனென்றால் அவர்கள் நிர்வாகம் செய்த காலத்தில் சோவியத்துகள் பயனற்றவையாக இருந்தன.

அது ''தோட்டா போடப்பட்ட'' கைத்துப்பாக்கியாக இருக்க வேண்டுமென்றால் ஆயுதந்தாங்கிய எழுச்சிக்காகத் தொழில்நுட்பத் தயாரிப்புகளைச் செய்வதென்பதைத் தவிர அதற்கு வேறு எந்த அர்த்தமும் கிடையாது. தோட்டாவைச் சேகரிக்க வேண்டும், கைத்துப்பாக்கிக்குள் அதைப் போட வேண்டும்—அது மட்டுமல்ல, ஒரே ஒரு தோட்டா இருந்தால் மட்டும் போதாது.

லீபெர்டான்களின் தரப்புக்குப் போய் விடுங்கள், ''எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கே'' என்ற

கோஷத்தைப் பகிரங்கமாகக் கைவிடுங்கள் அல்லது ஆயுதந்தாங்கிய எழுச்சியைத் தொடங்குங்கள். நடுப்பாதை என்பது கிடையாது.

---

> "...ரொத்ஸியான்கோ விரும்பினாலும் கூட முதலாளி வர்க்கத்தினர் பெத்ரோகிராதை ஜெர்மானியர்களிடம் விட்டுவிட முடியாது. ஏனென்றால் அங்கே சண்டை போடுவது நம்முடைய வீரம் நிறைந்த கடற்படைவீரர்களே தவிர முதலாளி வர்க்கம் அல்ல...."

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான சக்திகளையும் தகுதிகளையும் பற்றி அவநம்பிக்கை கொண்டவர்கள் முதலாளி வர்க்கத்தைப் பொறுத்த வரை தங்களுடைய ஒவ்வொரு முயற்சியிலும் ஆபத்தான வகையில் வெளிப்படுத்துகின்ற அதே "நம்பிக்கையை" இந்த வாதமும் மறுபடியும் கொண்டிருக்கிறது.

வீரமிக்க கடற்படையினர் சண்டையை நடத்துகிறார்கள். ஆனால் ஈஸெல் கைப்பற்றப்படுவதற்கு முன்பு இரண்டு அட்மிரல்கள் மறைந்து போனதை அது தடுக்கவில்லையே!!

இது உண்மை. உண்மைகள் முரட்டுத்தனமானவை. கர்னீலவுக்குச் சிறிதும் குறையாத விதத்தில் அட்மிரல்களும் துரோகம் செய்யக் கூடியவர்களே என்பதை உண்மைகள் நிரூபிக்கின்றன. போர்த் தலைமையகம் சீர்திருத்தப்படவில்லை, தலைமை வகிக்கும் உயர் அதிகாரிகள் தன்மையில் கர்னீலவ்வாதிகளாக இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மைதான்.

கர்னீலவ்வாதிகள் (கேரென்ஸ்கி அவர்களுடைய தலைவர்—ஏனென்றால் அவரும் கர்னீலவ்வாதியே) பெத்ரோகிராதை விட்டுக்கொடுக்க விரும்பினால் அதை இரண்டு அல்லது மூன்று வழிகளில் கூடச் செய்யலாம்.

முதலாவதாக, கர்னீலவ்வாத அதிகாரிகளின் துரோகச் செயலின் மூலம் அவர்கள் வடக்கு நிலப் போர் முனையைத் திறந்து விடலாம்.

இரண்டாவதாக, ஜெர்மானியக் கடற்படை முழுமைக்

கும் செயல் சுதந்திரத்துக்கு அவர்கள் ''ஒத்துக் கொள்ள'' முடியும். அந்தக் கடற்படை நம்முடைய கடற்படையைக் காட்டிலும் பலமிக்கது. ஜெர்மானிய ஏகாதிபத்தியவாதிகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஆகிய இருவரோடுமே அவர்கள் ஒத்துப் போக முடியும். அது மட்டுமல்ல. ''காணாமற் போய் விட்ட அட்மிரல்கள்'' திட்டங்களையும் ஜெர்மானியர்களிடம் கொடுத்திருக்கலாம்.

மூன்றாவதாக, கதவடைப்புகள் மூலமும் உணவு கொண்டு போவதைத் தகர்ப்பதன் மூலமும் அவர்கள் நம்முடைய துருப்புகளைப் பரிபூரணமான அளவுக்கு நம்பிக்கையிழந்த, செயலற்ற நிலைமைக்குக் கொண்டுவர முடியும்.

இந்த மூன்று வழிகளில் ஒன்றைக் கூட மறுக்க முடியாது. ருஷ்ய பூர்ஷ்வா கஸாக் கட்சி மூன்று கதவுகள் அனைத்தையும் முன்பே தட்டிப் பார்த்திருக்கிறது, அவை ஒவ்வொன்றையும் திறக்க முயற்சி செய்திருக்கிறது என்பதைத் தகவல்கள் நிரூபித்திருக்கின்றன.

இதற்குப் பிறகு? முதலாளி வர்க்கம் புரட்சியின் கழுத்தை நெரிக்கின்ற வரை காத்திருப்பதற்கு நமக்கு உரிமை கிடையாது.

ரொத்ஸியான்கோவின் ''விருப்பங்களை'' அற்பமாக நினைத்து விட முடியாது என்பதை அனுபவம் நிரூபித்திருக்கிறது. ரொத்ஸியான்கோ செயல் வீரர். ரொத்ஸியான்கோவை மூலதனம் ஆதரிக்கிறது. இதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. பாட்டாளி வர்க்கத்திடம் ஆட்சியதிகாரம் இல்லாதிருக்கின்ற வரை மூலதனம் பிரமாண்டமான பலத்தைக் கொண்டிருக்கிறது. ரொத்ஸியான்கோ பல பத்தாண்டுகளாக மூலதனத்தின் கொள்கைகளை நம்பிக்கையாகவும் உண்மையாகவும் நிறைவேற்றி வந்திருக்கிறார்.

இதற்கு பிறகு? புரட்சியைக் காப்பதற்கு ஒரே வழி ஆயுதந்தாங்கிய எழுச்சி என்ற பிரச்சினையில் ஊசலாட்டத்தைக் காட்டுவது முதலாளி வர்க்கத்தினரிடம் உள்ள பேடித்தனமான எதையும் நம்புகின்ற தன்மையில்—அது பாதி லீபெர்டான், சோஷலிஸ்டு-புரட்சியாளர், மென்ஷிவிக் மற்றும் பாதி ''விவசாயியைப் போன்ற'' கேள்வி கேட்காமல் நம்புகின்ற தன்மையாகும்—மூழ்கிப் போவதே

அர்த்தம் என்பது தொடர்கிறது. மற்ற எல்லாவற்றை யும் காட்டிலும் இதற்கு எதிராகவே போல்ஷிவிக்குகள் போராடியிருக்கிறார்கள்.

உங்களுடைய திறந்த மார்பின் மீது அவசியமில்லாத கைகளைக் குறுக்கே மடக்கி வைத்துக்கொள்ளுங்கள். ரொத்ஸியான்கோ வகையறாக்கள் பெத்ரோகிராதை விட்டுக் கொடுத்து விட்டுப் புரட்சியின் குரல்வளையை நெரிக்கின்ற வரை காத்துக் கொண்டு அரசியல் நிர்ணய சபையில் உங்களுடைய ''நம்பிக்கையைப்'' பற்றி சத்தி யம் செய்து கொண்டிருங்கள். அல்லது ஆயுதம் தாங்கிப் போராடுங்கள், நடுப்பாதை என்பது கிடையாது.

அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவது கூட அதனள வில் எதையும் மாற்றப் போவதில்லை. ஏனென்றால் உயர்ந்த அரசுரிமை கொண்ட எந்த சட்ட சபையின் ''அரசியலமைப்பும்'' அதன் வாக்கும் பஞ்சத்தின் மீதோ அல்லது வில்ஹெல்மின் மீதோ எத்தகைய விளைவையும் ஏற்படுத்தப் போவதில்லை. அரசியல் நிர்ணய சபை கூட் டப்படுதல், அதன் வெற்றி ஆகிய இரண்டுமே சோவியத்து களுக்கு ஆட்சியதிகாரத்தை மாற்றுவதைச் சார்ந்திருக் கின்றன. இந்தப் பழைய போல்ஷிவிக் உண்மையை எதார்த்தம் அதிகக் கூர்மையாகவும் குரூரமாகவும் நிரு பித்துக் கொண்டிருக்கிறது.

---

> ''...நாம் நாள்தோறும் அதிகமான பலத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அரசியல் நிர்ணய சபைக்குள் ஒரு வலிமையான எதிர்க்கட்சி என்ற முறையில் நாம் நுழைய முடியும். நாம் எல்லா வற்றையும் எதற்காகப் பணயம் வைக்க வேண் டும்...?''

அரசியல் நிர்ணய சபை கூட்டப்படும் என்பதைப் ''படித்து விட்டு'' அதிகச் சட்டபூர்வமான, அதிக விசு வாசமான, அதிகமான அளவுக்கு அரசியலமைப்புச் சட்ட வழியில் நம்பிகையோடு கலந்துவிடுகின்ற அற்பவாதி யினுடைய வாதம் இது.

ஆனால் அரசியல் நிர்ணய சபைக்காகக் காத்திருப்பத

னால் பஞ்சத்தைப் பற்றிய பிரச்சினையை அல்லது பெத்ரோகிராதை விட்டுவிடுவதைப் பற்றிய பிரச்சினையைத் தீர்க்கப் போவதில்லை என்பது பரிதாபமே. வெகுளித்தனமானவர்கள் அல்லது குழப்பமுடையவர்கள் அல்லது தங்களைப் பயமுறுத்த அனுமதித்துக் கொண்டவர்கள் தான் இந்தச் ''சிறு விஷயத்தை'' மறந்து விடுகிறார்கள்.

பஞ்சம் காத்திருக்கப் போவதில்லை. விவசாயிகளின் ஆயுதந்தாங்கிய போராட்டம் காத்திருக்கவில்லை. யுத்தம் காத்திருக்கப் போவதில்லை. காணாமற் போய் விட்ட அட்மிரல்கள் காத்திருக்கவில்லை.

போல்ஷிவிக்குகளாகிய நாம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதில் நம்பிக்கையை அறிவிப்பதனால் பஞ்சம் காத்திருக்க ஒத்துக் கொள்ளுமா? காணாமற் போய் விட்ட அட்மிரல்கள் காத்திருக்க ஒத்துக் கொள்வார்களா? மக்லக்கோவ்களும் ரொத்ஸியான்கோக்களும் கதவடைப்புகளையும் தானியம் ஒப்படைக்கப்படுவதைத் தகர்ப்பதையும் நிறுத்துவதற்கு அல்லது பிரிட்டிஷ் மற்றும் ஜெர்மன் ஏகாதிபத்தியவாதிகளோடு செய்யப்பட்டிருக்கும் இரகசிய ஒப்பந்தங்களை இடித்துக் கூறுவதற்கு ஒத்துக் கொள்வார்களா?

''அரசியலமைப்புச் சட்ட பிரமைகள்'' மற்றும் நாடாளுமன்ற மூடத்தனத்தின் கதாநாயகர்களின் வாதங்கள் இதற்குத்தான் உதவும். வாழ்கின்ற எதார்த்தம் மறைந்து விடுகிறது; அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதைப் பற்றிய காகிதம் மட்டுமே மிஞ்சுகிறது, தேர்தல்கள் நடத்துவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

பசியால் வாடும் மக்களும் ஜெனரல்கள், அட்மிரல்களால் காட்டிக்கொடுக்கப்பட்ட படைவீரர்களும் தேர்தல்களைப் பற்றி ஏன் அலட்சியமாக இருக்கிறார்கள் என்று குருடர்கள்தான் இன்னும் ஆச்சரியப்படுகிறார்கள். அட புத்திசாலிகளே!

---

> ''...கர்னீலவ்வாதிகள் மறுபடியும் ஆரம்பிக்கட்டும், நாம் அவர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்போம். ஆனால் நாம் ஆபத்துக்களை ஏற்படுத்திக் கொண்டு ஏன் ஆரம்பிக்க வேண்டும்?...''

இது அசாதாரணமான அளவுக்கு நம்பவைப்பதாகவும் புரட்சிகரமானதாகவும் இருக்கிறது. வரலாறு மறுபடியும் நடப்பதில்லை; ஆனால் நாம் வரலாற்றை நோக்கி நம்முடைய முதுகுகளைத் திருப்பிக் கொண்டு கர்னீலவின் முதல் கலகத்தைப் பற்றிச் சிந்தனை செய்து விட்டு ''கர்னீலவ்வாதிகள் மறுபடியும் ஆரம்பித்துப் பார்க்கட்டும்'' என்று திரும்பத் திரும்பச் சொன்னால்—நாம் அவ்வாறு செய்தால்—அது மிகச் சிறப்பான புரட்சிகரப் போர்த் திட்டமாக இருக்குமா? அது ''காத்துக்கொண்டிருக்கும் விளையாட்டு'' மாதிரி அல்லவா இருக்கும்! அவர்களுக்குச் சாதகமில்லாத ஒரு சமயத்தில் கர்னீலவ்வாதிகள் மறுபடியும் ஆரம்பிக்கலாம்!—இதை அழுத்தமான ''வாதம்'' என்று சொல்ல முடியுமா? பாட்டாளி வர்க்கக் கொள்கையின் உறுதியான அடிப்படையில் இது எந்த வகை?

இரண்டாவது தடவையாகத் திரட்டப்படுகின்ற கர்னீலவ்வாதிகள் ஓரிரு விஷயங்களைக் கற்றுக்கொண்டிருந்தால் என்ன நிலைமை ஏற்படும்? அவர்கள் ஆரம்பிக்கு முன்பு உணவுக் கலகங்கள் தொடங்கட்டும், போர்முனை தோல்வியடையட்டும், பெத்ரோகிராதை விட்டுவிடட்டும் என்று காத்துக் கொண்டிருந்தால் என்ன செய்வது? அப்பொழுது என்ன செய்ய முடியும்?

கர்னீலவ்வாதிகள் தாங்கள் முதலில் செய்த தவறுகளில் ஒன்றைத் திருப்பிச் செய்வார்கள் என்ற சாத்தியத்தின் மீது பாட்டாளி வர்க்கக் கட்சியின் செயல்தந்திரத்தைக் கட்ட ஆலோசிக்கப்படுகிறது!

போல்ஷிவிக்குகளால் நூற்றுக்கணக்கான தடவைகள் எடுத்துக் காட்டப்பட்டிருந்த, எடுத்துக் காட்டப்பட்ட எல்லாவற்றையும் நாம் மறந்து விடுவோம்; நம்முடைய புரட்சியின் ஆறு மாத கால வரலாறு நிரூபித்திருக்கின்ற எல்லாவற்றையும், அதாவது கர்னீலவின் சர்வாதிகாரம் அல்லது பாட்டாளி வர்க்கத்தின் சர்வாதிகாரத்தைத் தவிர இங்கே வேறு வழி கிடையாது, எதார்த்தமான வேறு வழி இல்லை, அப்படி இருக்கவும் முடியாது என்ற பாடத்தை நாம் மறந்து விடுவோம். நாம் இதை மறந்து விடுவோம், எல்லாவற்றையும் கைகழுவிவிட்டுக் காத்திருப்போம்! காத்திருப்பது எதற்காக? ஒரு அதிசயம் ஏற்படுவதற்காக, ஏப்ரல் 20 முதல் ஆகஸ்ட் 29 முடிய நடை

பெற்றிருக்கும் சூறாவளியான, பேராபத்தான சம்பவங்களின் வளர்ச்சிப் போக்கைத் தொடர்ந்து (யுத்தம் நீடிப்பதனாலும் பஞ்சம் பரவுவதனாலும்) அரசியல் நிர்ணய சபை சமாதானமாக, அமைதியாக, சுலபமாக, சட்ட முறைப்படி கூட்டப்படுவதற்கும் அதனுடைய மிகவும் சட்டபூர்வமான முடிவுகள் நிறைவேறுவதற்கும் காத்திருப்போம். இதுவே ''மார்க்சியச்'' செயல்தந்திரம்! அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதாகக் கேரென்ஸ்கி வாக்களித்து விட்டார். பட்டினி கிடப்பவர்களே! காத்திருங்கள்!

---

> ''...நாம் உடனடியாகச் செயலாற்றுவதை அவசியமாக்கும் வகையில் சர்வதேச நிலைமையில் உண்மையில் எதுவுமே இல்லை. நம்மைச் சுட்டுக் கொல்ல அனுமதிப்போமானால் மேற்கில் சோஷலிஸ்ட் புரட்சி இலட்சியத்துக்கு நாம் ஆபத்துண்டாக்கப் போகிறோம் என்பதே அதிகமான சாத்தியமாகும்....''

இந்த வாதம் உண்மையிலேயே பிரமாதம். சர்வதேச சோஷலிஸ்ட் புரட்சிக்குத் தொழிலாளர்களின் அனுதாபங்களை ஷெய்டெமன் ''கூட'', ரெனொடேல் ''கூட'' இதைக் காட்டிலும் அதிகமான மதிநுட்பத்தோடு ''கையாள'' முடியாது!

இதைச் சிந்தித்துப் பாருங்கள்: பேய்த்தனமான, பயங்கர நிலைமைகளுக்கிடையே, ஒரே ஒரு லீப்க்னெஹ்டை மட்டும் வைத்துக் கொண்டு (அவரும் சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறார்) பத்திரிகைகள் இல்லாமல், கூட்டம் நடத்துவதற்கு உரிமை இல்லாமல், சோவியத்துகள் இல்லாமல், மக்கள் தொகையில் எல்லா வர்க்கத்தினரும் (வசதியான விவசாயிகள் உள்பட) சர்வதேசியவாதம் என்ற கருத்துக்கு நம்ப முடியாத அளவுக்கு விரோதமாக இருக்கும் பொழுது, ஏகாதிபத்திய பெரிய, நடுத்தர மற்றும் குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினர் மிகவும் சிறப்பான ஸ்தாபன அமைப்பில் திரண்டிருக்கும் பொழுது—ஜெர்மானியர்கள், அதாவது ஜெர்மன் புரட்சிகரமான சர்வதேசியவாதிகள், மாலுமிகளின் மேற்சட்டைகளை

அணிந்து கொண்டிருக்கும் தொழிலாளர்கள் கடற்படையில் ஒரு கலகத்தை—அது வெற்றி பெறுவதற்கு நூறில் ஒரு சந்தர்ப்பமே இருந்தது—ஆரம்பித்தார்கள்.

ஆனால் நம்மிடம் டஜன்கணக்கான பத்திரிகைகள் இருக்கின்றன, கூட்டம் நடத்த உரிமை இருக்கிறது, சோவியத்துகளில் நமக்குப் பெரும்பான்மை இருக்கிறது. உலகத்தின் பாட்டாளி வர்க்க சர்வதேசியவாதிகளில் நாம்தான் மிகச் சிறப்பான நிலைமையில் இருக்கிறோம். ஆனால் நம்முடைய எழுச்சியின் மூலம் ஜெர்மானியப் புரட்சியாளர்களுக்கு உதவி செய்ய நாம் மறுப்போம். ஷெய்டெமன்களையும் ரெனொடேல்களையும் போல நாம் வாதாடுவோம், அதாவது புரட்சி செய்யாமலிருப்பதே சமயோசிதம், ஏனென்றால் நாம் கொல்லப்பட்டால் மிகச் சிறந்த, நியாயமான, இலட்சியவாதிகளான சர்வதேசியவாதிகளை உலகம் இழந்து விடும் என்று வாதாடுவோம்!!

நாம் எவ்வளவு நியாயமானவர்கள் என்பதை நிரூபிப்போம். ஜெர்மன் புரட்சிகாரர்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவோம். ருஷ்யாவில் புரட்சியைக் கைவிடுவோம். இதுதான் உண்மையான, நியாயமான சர்வதேசியவாதம். இத்தகைய அறிவுமிக்க கொள்கை எல்லா இடங்களிலும் வெற்றிபெறுமானால் உலக சர்வதேசியவாதம் எவ்வளவு வேகமாகப் பூக்கும் என்பதைக் கற்பனை செய்யுங்கள்!...

யுத்தம் எல்லா நாடுகளையும் சேர்ந்த தொழிலாளர்களை மிகவும் அதிகமான அளவுக்குக் களைப்படையச் செய்து துன்புறுத்தி விட்டது. இத்தாலியிலும் ஜெர்மனியிலும் ஆஸ்திரியாவிலும் திடீர் எழுச்சிகள் அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. நம்மிடம் மட்டுமே தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகள் இருக்கின்றன. நாம் காத்துக் கொண்டே இருப்போம். ருஷ்ய விவசாயிகள் நிலவுடைமையாளர்களுக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்து கேரென்ஸ்கி அரசாங்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்யுமாறு நம்மைக் கோருகிறார்கள்—வார்த்தைகளில் அல்ல, செயலில் அவர்களுக்கு நாம் துரோகம் செய்வதைப் போல ஜெர்மன் சர்வதேசியவாதிகளுக்கும் துரோகம் செய்வோம்....

எல்லா நாடுகளையும் சேர்ந்த முதலாளிகளின்—அவர்கள் ருஷ்யப் புரட்சியின் குரல்வளையை நெறிக்கத் தயாராக இருக்கிறார்கள்—ஏகாதிபத்தியச் சதி மேகங்கள் திரளட்டும். ரூபிளால் நம் குரல்வளை நெறிக்கப்படுகின்ற வரை நாம் பொறுமையோடு காத்திருப்போம்! தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதிகளின் சோவியத்துகளின் வெற்றியினால் சதிகாரர்களைத் தாக்கி அவர்கள் சிதறி ஓடுமாறு செய்வதற்குப் பதிலாக அரசியல் நிர்ணய் சபைக்காக நாம் காத்திருப்போம். கேரென்ஸ்கியும் ரொத்ஸியான்கோவும் மனச்சாட்சிக்குக் கட்டுப்பட்டு அரசியல் நிர்ணய சபையைக் கூட்டி விட்டால் எல்லா சர்வதேசச் சதிகளையும் அங்கே வாக்கெடுப்பின் மூலம் முறியடித்து விடலாம். கேரென்ஸ்கி, ரொத்ஸியான்கோவின் நேர்மையைச் சந்தேகிப்பதற்கு நமக்கு ஏதேனும் உரிமையுண்டா?

---

> ''...ஆனால் 'எல்லோருமே' நமக்கு எதிராக இருக்கிறார்கள்! நாம் தனிமைப்பட்டிருக்கிறோம். மத்திய நிர்வாகக் குழு, மென்ஷிவிக் சர்வதேசியவாதிகள், நோவயா ஷிஸின் ஆதரவாளர்கள் மற்றும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் நமக்கு எதிராக அறைகூவிக் கொண்டிருக்கிறார்கள், அப்படியே தொடர்ந்து செய்வார்களே!...''

இது நம்மை நசுக்கிவிடுகின்ற வாதம். இது வரையிலும் நாம் ஊசலாட்டக்காரர்களுக்கு அவர்களுடைய ஊசலாட்டங்களுக்காக ஈவிரக்கமில்லாமல் சவுக்கடி கொடுத்தோம். அப்படிச் செய்ததன் மூலம் நாம் மக்களின் அனுதாபத்தைப் பெற்றோம். அப்படிச் செய்ததன் மூலம் நாம் சோவியத்துகளை வென்றெடுத்தோம். அவை இல்லாவிட்டால் எழுச்சி பாதுகாப்பானதாக, வேகமானதாக, நிச்சயமானதாக இருக்க முடியாது. இப்பொழுது நாம் ஊசலாட்டக்காரர்களின் முகாமுக்குள் நுழைவதற்கு வென்றெடுத்திருக்கும் சோவியத்துகளை உபயோகப்படுத்துவோம். போல்ஷிவிசத்துக்கு எவ்வளவு அற்புதமான முன்னேற்றம்!

லீபெர்டான்கள் மற்றும் செர்னோவ்கள், அதைப்

போலவே ''இடதுசாரி'' சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் மற்றும் மென்ஷிவிக்குகளின் கொள்கையின் மொத்த சாராம்சமுமே ஊசலாட்டங்களில் அடங்கியிருக்கிறது. பெருந்திரளான மக்கள் இடதுசாரித் திசையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள் என்ற உண்மையின் குறியடையாளம் என்ற வகையில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர் களும் மென்ஷிவிக் சர்வதேசியவாதிகளும் மகத்தான அரசியல் முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில், மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆகிய இரு தரப்புகளையும் சேர்ந்த வர்களில் 40 சதவிகிதத்தினர் இடதுசாரி முகாமிற்கு வந் திருப்பதும் மறு பக்கத்தில், விவசாயிகளின் எழுச்சியும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டிருக்கின்றன.

உளுத்துப் போய் விட்ட மத்திய நிர்வாகக் கமிட்டியும் ஊசலாடிக் கொண்டிருக்கும் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் வகையறாக்களும் நமக்கு எதிராக இருக் கிறார்கள் என்ற விவரத்தை இப்பொழுது முணு முணுக்கத் தொடங்கியிருப்பவர்களின் ஆழம் காண முடி யாத கோழைத்தனத்தை இந்த இடைத் தொடர்பின் தன் மையே வெளிப்படுத்துகிறது. ஏனென்றால் குட்டி முத லாளித்துவத் தலைவர்களின், மார்த்தவ்கள், கம்கோவ்கள், சுஹானவ்கள் வகையறாக்களின் இத்தகைய ஊசலாட்டங் களை விவசாயிகளின் எழுச்சியோடு ஒப்பிட வேண்டும். இது ஒரு எதார்த்தமான அரசியல் ஒப்பீடாகும். நாம் யாரோடு போக வேண்டும்? பெருந்திரளான மக்களின் இடதுசாரித் திருப்பத்தை மறைமுகமாக எடுத்துக்காட்டு கின்ற குறைவான எண்ணிக்கையுள்ள, ஊசலாடுகின்ற பெத்ரோகிராத் தலைவர்களுடன், ஒவ்வொரு அரசியல் திருப்பத்தின் போதும் வெட்கக்கேடான முறையில் சிணுங்கி ஊசலாடி லீபெர்டான்கள், அவ்க்சேன்தியெவ் கள் கம்பெனியினரிடம் மன்னிப்புக் கேட்க ஓடுபவர் களோடா? அல்லது இடதுசாரித் திசையில் முன்னேறியுள்ள இந்தப் பெருந்திரளான மக்களோடா?

இந்தக் கேள்வியை இப்படி, இப்படி மட்டுமே முன்வைக்க வேண்டும்.

விவசாயிகளின் எழுச்சிக்கு மார்த்தவ்களும் கம்கோவ்

களும் சுஹானவ்களும் துரோகம் செய்து விட்டபடியால் தொழிலாளர்களின் புரட்சி சர்வதேசியவாதக் கட்சியாகிய நாமும் அதற்கு துரோகம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள். இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்களையும் மென்ஷிவிக் சர்வதேசியவாதிகளையும் ''குறை சொல்லும்'' கொள்கை கடைசியில் இப்படித் தான் முடிந்து விடும்.

ஆனால் ஊசலாட்டக்காரர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்றால் நம்முடைய ஊசலாட்டத்தை நிறுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். அந்த ''அருமையான'' இடதுசாரி குட்டி முதலாளித்துவ ஜனநாயக வாதிகள் கூட்டணிக்கு ஆதரவாக ஊசலாட்டத்தைக் காட்டவில்லையா? நாம் ஊசலாடவில்லை என்பதால் அவர்கள் நம்மைப் பின்பற்றுமாறு செய்வதில் நாம் நெடுங் கால நோக்கில் வெற்றியடைந்தோம். நாம் செய்தது சரி என்பதை வாழ்க்கை காட்டி விட்டது.

இந்த கனவான்கள் தங்களுடைய ஊசலாட்டத்தின் மூலம் எப்பொழுதும் புரட்சியைப் பின்னால் இழுத்தார்கள். நாம் மட்டுமே புரட்சியைக் காப்பாற்றினோம். இன்று பஞ்சம் பெத்ரோகிராதின் கதவுகளைத் தட்டும் பொழுது, ரொத்ஸியான்கோ வகையறாக்கள் நகரத்தைக் கைவிடுவதற்குத் தயாரிப்புச் செய்து கொண்டிருக்கும் பொழுது நாம் புரட்சியைக் கைவிடுவதா?!

---

> ''...ஆனால் இரயில்வேத் தொழிலாளர்களிடமும் தபால் இலாகா தொழிலாளர்களிடமும் நமக்கு உறுதியான தொடர்புகள் கூடக் கிடையாதே. பிளான்சன்கள்தான் அவர்களுடைய அதிகார பூர்வமான பிரதிநிதிகள். தபால் மற்றும் இரயில்வேக்கள் இல்லாமல் நாம் வெற்றியடைய முடியுமா?...''

ஆமாம், இங்கேயுள்ள பிளான்சன்கள், அங்கேயுள்ள லீபெர்டான்கள். பெருந்திரளான மக்கள் அவர்களிடம் என்ன நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்? அந்தத் தலைவர்கள் பெருந்திரளான மக்களுக்குத் துரோகம் செய்து விட்

டார்கள் என்று நாம் எப்போதுமே சொல்லவில்லையா? மாஸ்கோவில் நடைபெற்ற தேர்தல்கள், சோவியத்து களுக்கு நடைபெற்ற தேர்தல்கள் ஆகிய இரண்டிலுமே பெருந்திரளான மக்கள் இந்தத் தலைவர்களிடமிருந்து நம்மை நோக்கித் திரும்பவில்லையா? அல்லது இரயில்வே மற்றும் தபால் தொழிலாளர்களில் பெருந்திரளானவர்கள் பட்டினியால் வாடவில்லையா? அல்லது கேரென்ஸ்கி வகையறாக்களின் அரசாங்கத்தை எதிர்த்து வேலைநிறுத் தம் செய்யவில்லையா?

''பிப்ரவரி 28க்கு[18] முன்பு இந்த சங்கங்களோடு நமக்குத் தொடர்புகள் இருந்தனவா?'' என்று ஒரு தோழர் இந்த ''அவநம்பிக்கைவாதியைக்'' கேட்டிருக் கிறார். இரண்டு புரட்சிகளையும் ஒப்பிட முடியாது என்று சுட்டிக் காட்டி அவர் பதிலளித்திருக்கிறார். ஆனால் இந்தப் பதில் கேள்வியைக் கேட்டவருடைய நிலையைத்தான் பலப்படுத்துகிறது. ஏனென்றால் முதலாளி வர்க்கத்துக்கு எதிராகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு நெடுங் காலத் தயாரிப்புச் செய்ய வேண்டியதைப் பற்றி போல்ஷி விக்குகள்தான் ஆயிரக்கணக்கான தடவைகள் பேசியிருக் கிறார்கள் (அப்படிப் பேசியது தீர்மானமான தருணம் நெருங்கி வரும் பொழுது அந்த வார்த்தைகளை மறந்து விடுவதற்கு அல்ல). இரயில்வே மற்றும் தபால், தந்தித் தொழிலாளர்களுடைய சங்கங்களின் அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையில் குட்டி முதலாளித்துவ மற்றும் முதலாளித்துவ மேல் தட்டிலிருந்து பெருந்திர ளான மக்களின் பாட்டாளி வர்க்கக் கூறுகள் பிரிந்திருப் பதுமே சிறப்பான அம்சமாகும். இந்த சங்கங்களில் ஒவ் வொன்றுடனும் முன்னரே ''தொடர்புகளை'' நிச்சய மாகப் பெற்றிருப்பது முற்றிலும் அவசியமானதல்ல. எது முக்கியமானதென்றால் பாட்டாளி வர்க்கம் மற்றும் விவசாய வர்க்கத்தின் எழுச்சியின் வெற்றி மட்டுமே இரயில்வே மற்றும் தபால், தந்தித் தொழிலாளர்களுடைய பெருந்திரளினருக்கும் திருப்தி அளிக்க முடியும்.

---

''...பெத்ரோகிராதில் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குப் போதுமான ரொட்டி மட்டுமே

இருக்கிறது. புரட்சிக்காரர்களுக்கு நாம் ரொட்டி கொடுக்க முடியுமா?...''

ஆயிரக்கணக்கில் சொல்லப்பட்டிருக்கின்ற அவநம்பிக்கையான கருத்துகளில் இது ஒன்று (அவநம்பிக்கைவாதிகள் எப்பொழுதுமே ''சந்தேகிப்பார்கள்'', அனுபவத்தைத் தவிர வேறு எதைக் கொண்டும் அவர்களை மறுத்துச் சொல்ல முடியாது), தவறான தோள்கள் மீது குற்றத்துக்கான பொறுப்பைச் சுமத்துகின்ற கருத்துகளில் ஒன்று.

ரொத்ஸியான்கோ வகையறாக்கள்தான், முதலாளி வர்க்கமே பஞ்சத்தைத் தயாரிக்கிறது, பஞ்சத்தை உபயோகித்து புரட்சியின் குரல்வளையை நெறிப்பதைப் பற்றி ஊகம் செய்கிறது. கிராமப் பகுதிகளில் நிலக்கிழார்களுக்கு எதிராக விவசாயிகளின் எழுச்சி மற்றும் நகரப் பகுதிகளிலும் தலைநகரங்களிலும் முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளர்களின் வெற்றி ஆகியவற்றைத் தவிர பஞ்சத்திலிருந்து தப்புவதற்கு வேறு வழி இல்லை, வேறு வழியும் இருக்க முடியாது. பணக்கரர்களிடமிருந்து தானியத்தைப் பெறுவதற்கு அல்லது அவர்களுடைய சூழ்ச்சிகளை மீறி அதைக் கொண்டு போவதற்கு அல்லது ஊழலான ஊழியர்கள் மற்றும் லாப வேட்டைக்கார முதலாளிகளின் எதிர்ப்பை ஒழிப்பதற்கு அல்லது கண்டிப்பான முறையில் கணக்கு வைத்துக் கொள்வதற்கு வேறு எந்த வழியும் கிடையாது. ''ஜனநாயகத்தினுடைய'' உணவு வழங்கீட்டு ஸ்தாபனங்கள் மற்றும் உணவு நெருக்கடிகளின் வரலாறும் முதலாளிகளின் நாசவேலைகளைப் பற்றிய கோடிக்கணக்கான புகார்களும், அவற்றிலிருக்கின்ற சிணுங்கலும் கெஞ்சலும் இதை நிரூபிக்கின்றன.

புகார் செய்தல், கெஞ்சுதல், கண்ணீர் வடித்தல் ஆகியவற்றை விட்டு புரட்சிகரமான நடவடிக்கைக்கு முன்னேறிச் செல்வதற்கு வெற்றிகரமான பாட்டாளி வர்க்கப் புரட்சியின் சக்தியைத் தவிர பூமியில் வேறு எந்த சக்தியும் கிடையாது. பாட்டாளி வர்க்கப் புரட்சியில் எந்த அளவுக்குத் தாமதமேற்படுகிறதோ, சம்பவங்களினால் அல்லது தள்ளாடுபவர்கள் மற்றும் குழப்பமடைந்தவர்களின் ஊசலாட்டங்களினால் எவ்வளவு அதிகமாகத் தள்ளி வைக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு அதிகமான

உயிர்களைப் பலிவாங்கி விடும், தானியப் பொருள்களை அனுப்பிவைப்பதையும் வினியோகம் செய்வதையும் ஸ்தாபனரீதியில் அமைப்பது அந்த அளவுக்கு அதிகக் கடினமானதாக இருக்கும்.

''ஆயுதந்தாங்கிய எழுச்சியில் தாமதம் ஏற்படுவது பேராபத்தாகும்''—அதிகரித்துக் கொண்டிருக்கும் பொருளாதார அழிவை, நெருங்கிக் கொண்டிருக்கும் பஞ்சத்தைப் பார்க்கின்ற வருத்தப்படத்தக்க ''துணிச்சலைக்'' கொண்டிருந்த போதிலும் புரட்சி செய்ய வேண்டாமென்று தொழிலாளர்களைத் தடுக்கின்ற (அதாவது இன்னும் சற்றுக் கூடுதலான காலத்துக்கு முதலாளி வர்க்கத்திடம் நம்பிக்கை வைக்குமாறு அவர்களை இணங்க வைக்கப் பாடுபடுகின்ற) நபர்களுக்கு நாம் தரும் பதில் இதுவே.

---

> ''...போர்முனையில் எந்த ஆபத்தும் இன்னும் ஏற்படவில்லை. போர்வீரர்கள் தாங்களாகவே போர்நிறுத்த ஒப்பந்தத்தைச் செய்து கொண்டாலும் கூட அது ஒரு பேராபத்தல்ல....''

ஆனால் போர்வீரர்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் செய்ய போவதில்லை. அதற்கு அரசு அதிகாரம் தேவை. புரட்சி செய்யாமல் அதைப் பெற முடியாது. போர்வீரர்கள் தாங்களாகவே படைகளிலிருந்து ஓடிப் போய் விடுவார்கள். போர் முனையிலிருந்து வருகின்ற அறிக்கைகள் இதைத் தெரிவிக்கின்றன. நாம் காத்துக் கொண்டிருக்கக் கூடாது. ஏனென்றால் காத்திருப்பதில் ரொத்ஸியான்கோவுக்கும் வில்ஹெல்முக்கும் கூட்டு ஏற்பட உதவி செய்யும் ஆபத்திருக்கிறது. போர்வீரர்களிடம் (ஏற்கெனவே அவர்கள் எதற்கும் துணிந்த நிலைக்கு மிகவும் அருகில் வந்து விட்டார்கள்) முழுமையாக நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டு எல்லாவற்றையும் விதியின் தீர்ப்புக்கு விட்டுவிடுவார்களானால் முழுமையான பொருளாதார அழிவு ஏற்படும் ஆபத்திருக்கிறது.

---

> ''...நாம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பிறகு போர்நிறுத்த ஒப்பந்தத்தையோ அல்லது

ஜனநாயக சமாதானத்தையோ முடிவு செய்ய வில்லை என்றால் ஒரு புரட்சிகரமான யுத்தத்தில் சண்டை போடுவதற்குப் போர்வீரர்கள் விருப்ப மில்லாதிருக்கலாம். அப்படியானால் என்ன செய் வது?''

பத்து புத்திசாலிகள் பதில் சொல்ல முடிவதைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமான கேள்விகளை ஒரு முட்டாள் கேட்க முடியும் என்பது பழமொழி. இந்த வாதம் அந்தப் பழமொழியை நினைவுபடுத்துகிறது.

ஏகாதிபத்திய யுத்தத்தின் போது ஆட்சியதிகாரத்தைக் கொண்டிருப்பவர்களின் சிரமங்களை நாம் எக்காலத்திலும் மறுக்கவில்லை. எனினும் நாம் பாட்டாளி வர்க்கம் மற்றும் ஏழை விவசாயிகளின் சர்வாதிகாரத்தை வலி யுறுத்தினோம். செயலில் இறங்க வேண்டிய தருணம் வந்திருக்கும் பொழுது இதைக் கைவிட வேண்டுமா??

ஒரு நாட்டில் ஏற்படுகின்ற பாட்டாளி வர்க்க சர்வாதி காரம் சர்வதேச நிலைமையில், அந்த நாட்டின் பொரு ளாதார வாழ்க்கையில், இராணுவத்தின் நிலைமையிலும் அதன் மனோபாவத்திலும் மாபெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்று எப்பொழுதுமே சொல்லி வந்திருக் கிறோம். இப்பொழுது இவை எல்லாவற்றையும் ''மறந்து விடுவதா''? புரட்சியின் ''சிரமங்கள்'' நம்மை பயமுறுத்த அனுமதிப்பதா?

---

> ''...எல்லோருமே சொல்வதைப் போல, பெருந்திரளான மக்கள் தெருக்களுக்கு உந்தித் தள்ளப்படுகின்ற மனோபாவத்தில் இல்லை. அவ நம்பிக்கையை நியாயப்படுத்துகின்ற அடையாளங் களில் யூதர்களைப் படுகொலை செய்கின்ற இயக் கம் மற்றும் கறுப்பு நூற்றுவரின் பெரிதும் அதி கரித்துள்ள பத்திரிகைகளைக் குறிப்பிடலாம்....''

முதலாளி வர்க்கம் தங்களை பயமுறுத்துவதற்கு அனுமதித்து விட்டால் எல்லாப் பொருள்களும் நிகழ்வு களுமே அவர்களுக்கு இயற்கையாகவே மஞ்சளாகத்தான் தெரியும். முதலாவதாக, இயக்கத்தைப் பற்றிய மார்க்

சியக் கட்டளை விதிக்குப் பதிலாக அவர்கள் காட்சியள வான, அறிவுமுறைக் கட்டளைவிதியைப் பயன்படுத்து கிறார்கள். முழுமையான சர்வதேசப் பின்னணியில் நாடு முழுவதிலும் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சி மற்றும் சம்பவங்களின் வளர்ச்சிப் போக்கைப் பற்றி அரசியல் ரீதியாகப் பகுப்பாய்வு செய்வதற்குப் பதிலாக மனோ பாவங்களைப் பற்றிய அகநிலையான எண்ணங்களைப் பயன்படுத்துகிறார்கள். உறுதியான கட்சித் திசைவழி, அதன் விட்டுக் கொடுக்காத உறுதி—குறிப்பாக அதிகக் கூர்மையான புரட்சிகரத் தருணங்களில்—மனோபாவத் தைத் தோற்றுவிக்கக் கூடிய கூறுகளில் ஒன்று என்பதைத் ''தங்களுக்கு வசதியாக'' மறந்து விடுகிறார்கள் என்பது உண்மை. பொறுப்புமிக்க தலைவர்கள் தங்களுடைய ஊசலாட்டங்கள், நேற்றைய இலட்சியங்களுக்கு நெருப்பு வைக்கத் தயாராக இருப்பது ஆகியவற்றின் மூலம் பெருந் திரளான மக்களின் குறிப்பிட்ட பகுதியினருடைய மனோ பாவத்தில் மிகவும் அதிகமான அளவுக்கு அருவருப்பான ஊசலாட்டங்களைத் தோற்றுவிக்கிறார்கள் என்பதை மறந்து விடுவது சில சமயங்களில் அவர்களுக்கு மிகவும் ''வசதியானதே''.

இரண்டாவதாக, — இதுதான் இப்பொழுது மிகவும் முக்கியம்—பெருந்திரளான மக்களின் மனோபாவத்தைப் பற்றிப் பேசும் பொழுது முதுகெலும்பில்லாத இந்த நபர் கள் பின்வருவனவற்றைச் சேர்த்துக் கொள்ள மறந்து விடுகிறார்கள்:

அது பரபரப்பும் எதிர்பார்ப்புகளும் நிறைந்த மனோ பாவம் என்று ''எல்லோரும்'' தெரிவிக்கிறார்கள்;

சோவியத்துகளைப் பாதுகாக்க வருமாறு சோவியத்து கள் அறைகூவும் பொழுது தொழிலாளர்கள் ஒரே மனி தனைப் போலக் கிளர்ந்தெழுவார்கள் என்று ''எல்லோ ரும்'' ஒத்துக்கொள்கிறார்கள்;

''கடைசியான, தீர்மானமான போராட்டத்தைப் பற்றி''—அதன் தவிர்க்க முடியாத தன்மையை அவர் கள் தெளிவாக அங்கீகரிக்கிறார்கள்—மையங்கள் முடி வெடுக்காதிருப்பதைப் பற்றி தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவுக்கு அதிருப்தியடைந்திருக்கிறார்கள் என்று ''எல்லோரும்'' ஒத்துக்கொள்கிறார்கள்;

அதிகப் பெருந்திரளான மக்களின் மனோபாவம் எதற்கும் துணிந்த நிலைக்கு நெருங்கிவந்து விட்டது என்று ''எல்லோரும்'' ஏகமனதாக வர்ணித்து அதிலிருந்துதான் அராஜகம் வளர்ச்சியடையும் என்று சுட்டிக் காட்டுகிறார்கள்;

அதிகாரிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்காகச் செய்யப்படுகின்ற தனிப்பட்ட வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் பயனற்றவை என்பதை வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்கள் பார்த்து முழுமையாக உணர்ந்து விட்டதால் ஒரு பொதுப் போராட்டத்தைப் பற்றி—பகுதிப் போராட்டம் அல்ல—எங்கும் பேசப்படுவதால், அவர்கள் மத்தியில் ஆர்ப்பாட்டங்களுக்காக மட்டும், பகுதிப் போராட்டங்களுக்காக மட்டும் தெருக்களில் திரளுவதைப் பற்றி திட்டவட்டமான அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது என்பதையும் ''எல்லோரும்'' உணர்கிறார்கள்.

இன்னும் பல.

பெருந்திரளான மக்களின் மனோபாவத்தை நிர்ணயிப்பதை, நம்முடைய புரட்சியின் ஆறு மாத காலத்தில் வர்க்க மற்றும் அரசியல் போராட்டத்தின் முழுமையான வளர்ச்சி, சம்பவங்களின் முழுமையான வளர்ச்சிப் போக்கு ஆகிய கருத்துநிலைகளிலிருந்து நாம் அணுகினால் முதலாளி வர்க்கத்திடம் பயமடைந்து விட்ட நபர்கள் இந்தப் பிரச்சினையை எப்படித் திரித்துக் கூறுகிறார்கள் என்பது நமக்குத் தெளிவாகும். ஏப்ரல் 20—21, ஜூன் 9, ஜூலை 3[19] ஆகிய நாட்களுக்கு முன்பிருந்ததைப் போன்ற நிலை இன்று கிடையாது. ஏனென்றால் அன்று தானாகவே வேகம் ஏற்பட்டிருந்தது. ஒரு கட்சி என்ற முறையில் நாம் அதைப் புரிந்துகொள்ளத் தவறினோம் (ஏப்ரல் 20); அல்லது அதைப் பின்னால் இழுத்து அமைதியான ஆர்ப்பாட்டமாகச் செய்தோம் (ஜூன் 9 மற்றும் ஜூலை 3). ஏனென்றால் சோவியத்துகள் இன்னும் நம்முடைய அமைப்புகள் அல்ல, விவசாயிகள் இன்னும் லீபெர்டான்-செர்னோவ் பாதையை நம்பினார்களே தவிர போல்ஷிவிக் பாதையை (புரட்சியை) அல்ல, ஆகவே மக்களில் பெரும்பான்மையினர் நமக்குப் பின்னால் இல்லை, ஆகவே புரட்சி உரிய காலத்துக்கு முந்திவிடக்

கூடாது என்பனவற்றை நாம் அப்பொழுதே நன்கு அறிந் திருந்தோம்.

அந்த சமயத்தில் வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர் களில் பெரும்பான்மையினர் கடைசியான, தீர்மானமான போராட்டத்தைப் பற்றிய பிரச்சினையையே எழுப்ப வில்லை; அந்தச் சமயத்தில் நம் கட்சிக் கிளைகள் எல்லா வற்றிலும் ஒன்று கூட அதை எழுப்பியிருக்க மாட்டா. அறிவுவிளக்கம் பெறாத, மக்களின் மிக விரிவான பெருந் திரளினரிடம் ஒன்றுகுவிக்கப்பட்ட முயற்சியோ அல்லது எதற்கும் துணிந்த நிலையில் ஏற்படுகின்ற உறுதியோ இருக்கவில்லை. அவர்களிடம் ''நடவடிக்கையின்'' மூலம், சாதாரணமான ஆர்ப்பாட்டத்தின் மூலம் கேரென்ஸ்கி மற்றும் முதலாளி வர்க்கத்தினர் மீது ''தாக்கத்தை'' ஏற்படுத்துகின்ற நம்பிக்கையைக் கொண்ட, தானாகத் தோன்றிய வேகம் மட்டும் ஏற்பட்டிருந்தது.

ஒரு புரட்சிக்கு இது தேவையில்லை. ஒரு பக்கத்தில், வர்க்க உணர்வு கொண்ட சக்திகளிடம் கடைசி வரை போராடுவது என்ற உணர்வு பூர்வமான, உறுதியான, ஊசலாட்டமில்லாத தீர்மானம் இருக்க வேண்டும்; மறு பக்கத்தில், அரை நடவடிக்கைகளால் இப்பொழுது எதை யும் காப்பாற்ற முடியாது, யாரையும் ''தாஜா'' செய்ய முடியாது, பசியால் வாடுகின்ற மக்களை ஒரு தீர்மான மான போராட்டத்திற்கு போல்ஷிவிக்குகள் தலைமை தாங்கிக் கொண்டு போக முடியவில்லை என்றால் அவர்கள் ''அராஜக ரீதியில் கூட, எல்லாவற்றையும் நொறுக்கு வார்கள், எல்லாவற்றையும் அழிப்பார்கள்'' என்று உணர்கின்ற, நம்பிக்கையற்ற நிலை விரிவான மக்கள் திரளினரிடம் ஏற்பட வேண்டும்.

புரட்சியின் வளர்ச்சி தொழிலாளர்கள், விவசாயிகள் ஆகிய இருவரையுமே வர்க்க உணர்வு கொண்டவர் களிடம் அனுபவத்தால் ஏற்படுகின்ற பரபரப்பான மன நிலை, விரிவான மக்கள் திரளினரிடம் கதவடைப்பு ஆயு தத்தை உபயோகிப்பவர்கள் மற்றும் முதலாளிகள் மீது ஏற்படும் பகைமையான மனநிலை—இது மனமுறிவுக்கு நெருக்கமானது—ஆகிய இரண்டும் இணைந்த நிலை மைக்கு நடைமுறையில் கொண்டுவந்து விட்டது.

போல்ஷிவிசத்தைக் காப்பியடிக்கின்ற பிற்போக்குப்

பத்திரிகைகளைச் சேர்ந்த போக்கிரிகள் இதே மண்ணில் அடைந்திருக்கின்ற ''வெற்றியையும்'' நாம் புரிந்து கொள்ள முடியும். முதலாளி வர்க்கத்துக்கும் பாட்டாளி வர்க்கத்துக்குமிடையே தீர்மானமான சண்டை நெருங்கி வருகின்ற பொழுது பிற்போக்காளர்களுக்கு ஏற்படுகின்ற கெட்ட நோக்கத்தைக் கொண்ட மகிழ்ச்சி எல்லாப் புரட்சி களிலுமே விதிவிலக்கு இல்லாமல் கவனிக்கப்பட்டிருக் கிறது, அது எப்பொழுதுமே நடந்திருப்பதே, அதை முற்றி லும் தவிர்க்க முடியாது. இந்தச் சந்தர்ப்பம் உங்களை பயமுறுத்துவதற்கு நீங்கள் அனுமதித்தால் நீங்கள் எழுச்சியை மட்டுமல்ல, பொதுவில் பாட்டாளி வர்க்கப் புரட்சியையே கைவிட வேண்டியிருக்கும். ஏனென்றால் ஒரு முதலாளித்துவ சமூகத்தில் இந்தப் புரட்சி—பிற் போக்காளர்களுடைய தரப்பில் கெட்ட நோக்கத்தைக் கொண்ட மகிழ்ச்சியும் இந்த வழியில் நமக்கு லாபம் தேட முடியும் என்ற நம்பிக்கைகளும் சேர்ந்து வரா மல்—முதிர்ச்சி அடைய முடியாது.

கறுப்பு நூற்றுவர் முதலாளி வர்க்கத்தினரோடு சேர்ந்தே வேலை செய்கிறார்கள் என்பது வர்க்க உணர்வு கொண்ட தொழிலாளர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரி யும். தொழிலாளர்களின் தீர்மானமான வெற்றி (குட்டி முதலாளித்துவ வர்க்கத்தினருக்கு இதில் நம்பிக்கை கிடை யாது, முதலாளிகள் இதைப் பற்றி பயப்படுகிறார்கள், சில சமயங்களில் கறுப்பு நூற்றுவர் அது நடக்கட்டும் என்று கெட்ட நோக்கத்தால் மட்டுமே நினைக்கிறார்கள், ஏனென்றால் போல்ஷிவிக்குகள் ஆட்சியதிகாரத்தை நீடித்து வைத்திருக்க முடியாது என்று அவர்கள் நம்பு கிறார்கள்) இந்த வெற்றி கறுப்பு நூற்றுவர்களை முழுமையாக நசுக்கி விடும், போல்ஷிவிக்குகள் ஆட்சியதி காரத்தை உறுதியாகவும் யுத்தத்தினால் சித்திரவதைச் செய்யப்பட்டுத் துன்புறுத்தப்பட்டிருக்கும் மனிதகுலம் முழுமைக்கும் மிகவும் அதிகமான நன்மைக்காகவும் வகிக்க முடியும் என்பது அவர்களுக்கு மிகவும் நன்றாகத் தெரியும்.

ரொத்ஸியான்கோக்களும் சுவோரின்களும் சேர்ந்தே வேலை செய்கிறார்கள் என்பதையும் அவர்கள் தங்களுக் கிடையே பாத்திரங்களைப் பரிமாற்றிக் கொண்டிருக்

கிறார்கள் என்பதையும் அறிவுடைய எந்த நபரும் சந்தேகிக்க முடியுமா?

''அரசாங்க டூமாவில்'' பிற்போக்காளர்களின் கறுப்பு நூற்றுவர் சொற்பொழிவுகளை ''ருஷ்யக் குடியரசின் அரசாங்க அச்சகம்'' (சிரிக்காதீர்கள்!) அரசாங்கச் செலவில் அச்சடிக்கும் பொழுது, ரொத்ஸியான்கோவின் உத்தரவுகளைத்தான் கேரென்ஸ்கி அமுல் நடத்துகிறார் என்பதை உண்மைகள் நிரூபிக்கவில்லையா? ''தங்களுடைய சொந்த மனிதனுக்குச்'' சேவை செய்கின்ற தியேலோ நரோதாவின் கைக்கூலிகள் கூட இந்த உண்மையை அம்பலப்படுத்தவில்லையா? ஜாரிஸ்ட் நிலவுடைமையாளர்களின் ''நலன்களால்'' நிர்வகிக்கப்படுகின்ற கீழ்த்தரமான பத்திரிகையான நோவொயே விரேமியா[20] காடேட் கட்சியின் வேட்பாளர்களுக்கு முழு ஆதரவு கொடுத்ததை எல்லாத் தேர்தல்களின் போதும் நமக்குக் கிடைத்திருக்கும் அனுபவம் நிரூபிக்கவில்லையா?

நேற்று நாம் படித்தபடி வர்த்தகம் மற்றும் தொழில் துறைகளைச் சேர்ந்த முதலாளிகள் (இவர்கள் எந்தக். கட்சியையும் ஆதரிக்காத முதலாளிகளாம், ஆம், யாரையும் ஆதரிக்காத முதலாளிகள் என்பது உண்மையே, ஏனென்றால் விஹ்லாயெவ்களும் ரக்கீத்னிக்கவ்களும் குவஸ்தியோவ்களும் நிக்கீத்தின்களும் காடேட்டுகளோடு கூட்டணி சேரவில்லை — கடவுள் காப்பாற்றட்டும் — எந்தக் கட்சியையும் ஆதரிக்காத வர்த்தக மற்றும் தொழில் துறை வட்டாரங்களோடுதான் கூட்டணி அமைத்திருக்கிறார்கள்!) பெருந்தொகையான 3,00,000 ரூபிள்களை காடேட்டுகளுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கவில்லையா?

நாம் விஷயங்களை உணர்ச்சி பூர்வமாகப் பார்க்காமல் வர்க்கக் கருத்துநிலையிலிருந்து பார்த்தால், கறுப்பு நூற்றுவர்களுடைய பத்திரிகைகள் எல்லாமே ''ரியபுஷீன்ஸ்கி, மில்யுக்கோவ் வகையறாக்கள்'' என்ற நிறுவனத்தின் கிளைதானே. முதலாளிகள் ஒரு பக்கத்தில் மில்யுக்கோவ்களையும் ஸஸ்லாவ்ஸ்கிகளையும், பத்ரேசவ்களையும் இன்னும் இதரர்களையும், மறு பக்கத்தில் கறுப்பு நூற்றுவர்களையும் விலைக்கு வாங்குகிறார்கள்.

மலிவான கறுப்பு நூற்றுவர் நஞ்சைக் கொண்டு மக்களிடையே மிக மோசமான விஷத்தைப் பரப்புவதற்கு

முடிவு கட்டுவதற்கான ஒரே வழி பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியே.

பசியாலும் யுத்தம் நீடிப்பதாலும் களைத்துப் போய் இழிந்த நிலையிலிருக்கின்ற கூட்டம் கறுப்பு நூற்றுவருடைய நஞ்சைப் ''பிடித்துக்கொள்வதில்'' ஆச்சரியம் ஏதேனுமுண்டா? ஒடுக்கப்பட்ட பெருந்திரளான மக்கள் எதற்கும் துணிந்து விடுவது இல்லாத முதலாளித்துவ சமூகத்தின் வீழ்ச்சியின் முற்பொழுதை ஒருவரால் கற்பனை செய்ய முடியுமா? பெருந்திரளான மக்கள்—அவர்களில் பெரும் பகுதியினர் இன்னும் கல்வியறிவு இல்லாதவர்கள்—எதற்கும் துணிந்த நிலையிலிருக்கும் பொழுது இன்னும் பலவிதமான நஞ்சுகளை உட்கொள்வார்கள் என்பதில் ஏதேனும் சந்தேகம் இருக்க முடியுமா?

பெருந்திரளான மக்களின் மனோபாவத்தைப் பற்றி வாதம் செய்கின்ற பொழுது தங்களுடைய சொந்த பயந்தாங்கொள்ளித்தனத்துக்கு அவர்களைக் குற்றம் சாட்டுபவர்கள் யாருமே உதவி செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். பெருந்திரளான மக்கள் உணர்வு பூர்வமாக உரிய நேரம் வரட்டும் என்று காத்துக் கொண்டிருப்பவர்கள், உணர்வில்லாமலே நம்பிக்கையற்ற நிலையில் மூழ்கிக் கொண்டிருப்பவர்கள் என்று இரண்டாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆனால் ஒடுக்கப்பட்டுப் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கும் பெருந்திரளான மக்கள் கோழைகள் அல்ல.

---

> ''...மறு பக்கத்தில், மார்க்சிஸ்ட் கட்சி புரட்சியைப் பற்றிய பிரச்சினையை இராணுவ ரீதியான சதி என்ற அளவுக்குக் குறுக்கி விட முடியாது....''

மார்க்சியம் மிகவும் ஆழமான, பன்முகப் போதனையாகும். எனவே மார்க்சியத்திலிருந்து முறித்துக் கொள்பவர்களுடைய ''வாதங்களில்'' மார்க்சிடமிருந்து எடுக்கப்பட்ட உதிரியான மேற்கோள்கள்—அதிலும் அந்த மேற்கோள்கள் பொருத்தம் இல்லாத முறையில் செய்யப்படும் பொழுது — எப்பொழுதும் காணப்படுவதில் ஆச்சரியமில்லை. இராணுவ ரீதியான சதியை அமைப்பது குறிப்பிடப்பட்ட வர்க்கத்தின் கட்சியாக இல்லாதிருந்தால், அதன்

அமைப்பாளர்கள் பொதுவாக அரசியல் கட்டத்தையும் குறிப்பாக சர்வதேச நிலைமையையும் பகுப்பாய்வு செய் யாதிருந்தால், அந்தக் கட்சியின் தரப்புக்குப் பெரும் பான்மையான மக்களுடைய அனுதாபம்—புறநிலையான உண்மைகளின் மூலம் நிரூபிக்கப்பட்ட வகையில்—இல்லா திருந்தால், புரட்சிகரமான சம்பவங்களின் வளர்ச்சி குட்டி முதலாளி வர்க்கத்தின் சமரசப் பிரமைகளைச் செய் முறையில் மறுத்துரைக்காவிட்டால், புரட்சிகரமான போராட் டத்தின் ''சோவியத்துகள்'' மாதிரியான உறுப்புகளில் பெரும்பான்மையானவற்றை — அவை ''சக்திவாய்ந் தவை'' என்று அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அப்படிப்பட்டதாகத் தம்மை நடைமுறையில் காட்டிக் கொண்டிருக்க வேண்டும்—வென்றெடுக்காவிட்டால், மக்கள் முழுமையினருடைய சித்தத்துக்கு விரோதமாக அநியாய மான யுத்தத்தை நீடித்துக் கொண்டிருப்பதாக அர சாங்கத்துக்கு விரோதமான உணர்ச்சி இராணுவத்தின ரிடையே (யுத்த காலமாக இருந்தால்) முதிர்ச்சியடைய வில்லை என்றால், புரட்சியின் கோஷங்கள் (''எல்லா ஆட்சியதிகாரம் சோவியத்துகளுக்கே'', ''விவசாயிகளுக்கு நிலம் கொடு'', ''சண்டையில் ஈடுபட்டிருக்கும் எல்லா நாடுகளுக்கும் உடனடியான ஜனநாயக சமாதானம், எல்லா இரகசிய ஒப்பந்தங்களையும் இரகசியப் பேச்சு வார்த்தைகளையும் உடனடியாக ரத்துச் செய்வது'', இதரவை) விரிவாகப் பரப்பப்பட்டு மக்களுடைய ஆதர வைப் பெறாவிட்டால், பெருந்திரளான மக்கள் எதற்கும் துணிந்த நிலையை அடைந்திருப்பதையும் கிராமப் பகுதி யினரின் ஆதரவையும் பற்றி (தீவிரமான விவசாய இயக் கத்தினால் அல்லது நிலவுடைமையாளர்களுக்கும் நில வுடைமையாளர்களைப் பாதுகாக்கின்ற அரசாங்கத்துக் கும் எதிரான எழுச்சியின் மூலம் இந்த ஆதரவு நிரூபிக்கப் பட்டது) முன்னணியிலிருக்கும் தொழிலாளர்களுக்கு உறுதி ஏற்படவில்லை என்றால், சமாதான பூர்வமான மற்றும் நாடாளுமன்ற வழிகளில் நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும் என்ற மனப்பூர்வமான நம்பிக்கையை நாட்டின் பொருளாதார நிலைமை ஏற்படுத்தினால் இராணுவ ரீதியான சதி பிளாங்கீவாதமே.

ஒருவேளை இதுவே போதுமானதாக இருக்குமா?

**போல்ஷிவிக்குகள் அரசியலதிகாரத்தை நீடித்து வைத்திருக்க முடியுமா?** *என்ற தலைப்பில் நான் எழுதிய பிரசுரத்தில் (அது இரண்டொரு தினங்களில் வெளியிடப்படும் என்று நம்புகிறேன்) மார்க்சின் மேற்கோள் ஒன்றைக் கொடுத்திருக்கிறேன். அது உண்மையிலேயே புரட்சியின் பிரச்சினையைப் பற்றியது; ''கலை'' என்ற வகையில் புரட்சியின் கூறுகளை விரித்துரைப்பது.*

*ருஷ்யாவிலிருக்கும் எல்லா உளறுவாயர்களுமே இப்பொழுது இராணுவ சதியை எதிர்த்துப் பெருங்கூச்சல் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆயுதந்தாங்கிய எழுச்சிக் ''கலைக்கும்'' கண்டிக்கப்பட வேண்டிய இராணுவச் சதிக்கும் உள்ள வேற்றுமையை உங்கள் திருவாய்களைத் திறந்து விளக்கிக் கூறுங்கள் என்று நாம் இவர்களிடம் கூறினால் அவர்கள் மேற்சொன்னவற்றையே திருப்பிச் சொல்லுவார்கள் அல்லது தங்களை அவமானப்படுத்திக் கொள்வார்கள், தொழிலாளர்களுடைய பொதுவான ஏளனத்துக்கு ஆளாவார்கள் என்று நான் பந்தயம் கட்டத் தயாராக இருக்கிறேன். ''நாங்களும் மார்க்சியவாதிகள்'' என்று சொல்பவர்களே! நீங்கள் முயற்சி செய்யலாமே. ''இராணுவ் சதியை'' எதிர்த்து ஒரு பாட்டுப் பாடுங்கள்!*

## பிற்சேர்க்கை

மேலே காணப்படும் வரிகளை எழுதி முடித்த பிறகு, செவ்வாய்க்கிழமை மாலையில் எட்டு மணிக்கு, பெத்ரோ கிராதில் வெளியாகும் காலைப் பத்திரிகைகள் எனக்குக் கிடைத்தன. நோவயா ஷிஸின் பத்திரிகையில் திரு. வி. பஸா ரவின் கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. ''இரண்டு பிரபலமான போல்ஷிவிக்குகளின் பெயரில் உடனடியான நடவடிக்கைக்கு எதிரான வாதங்களடங்கிய அறிக்கை கையால் எழுதப்பட்டு நகரத்தில் வினியோகிக்கப்பட் டது'' என்று திரு. வி. பஸாரவ் குறிப்பிட்டிருக்கிறார்.

இது உண்மையானால், இந்தக் கடிதத்தை சாத்திய மான அளவுக்கு உடனடியாக வெளியிடுமாறு தோழர் களை (புதன்கிழமை நண்பகலுக்கு முன்பு இக்கடிதம் அவர்களுக்குக் கிடைக்காது) மன்றாடிக் கேட்டுக்கொள் கிறேன்.

அது பத்திரிகைகளுக்காக எழுதப்படவில்லை. நம் கட்சியின் உறுப்பினர்களோடு கடிதம் மூலமாகப் பேசு வதற்குத்தான் விரும்பினேன். ஆனால் கட்சிக்குச் சம் பந்தமில்லாத, அவர்களுடைய கேவலமான கோழைத் தனத்துக்காக ஆயிரம் தடவைகள் கட்சியால் ஏளனம் செய்யப்பட்டிருக்கும் நோவயா ஷிஸின் வீரர்கள் (அவர் கள் நேற்றுக்கு முந்திய நாளன்று போல்ஷிவிக்குகளுக்கும் நேற்று மென்ஷிவிக்குகளுக்கும் வாக்களித்தவர்கள், உலகப் புகழ் பெற்ற ஒற்றுமை காங்கிரசில் அவர்களை அநேக மாக ஒன்றுபடுத்தியவர்கள்), புரட்சி எழுச்சிக்கு எதிராகப் பிரசாரம் செய்யும் நம் கட்சியின் உறுப்பினர்களிடமிருந்து அறிக்கை இப்படிப்பட்ட தனிநபர்களுக்குக் கிடைக்கிற தென்றால் நாம் மௌனமாக இருக்க முடியாது. புரட்சி எழுச்சிக்கு ஆதரவாக நாமும் கிளர்ச்சி செய்ய வேண்டும். பெயர்கள் இல்லாத இந்தத் தனிநபர்கள் பகிரங்கமாக

வெளியே வரட்டும்; அவர்களுடைய அவமானகரமான ஊசலாட்டங்களுக்கு உரிய தண்டனையை—அது வர்க்க உணர்வு கொண்ட எல்லாத் தொழிலாளர்களின் பரிகாசமாக மட்டுமே இருந்தாலும் கூட—அடைய வேண்டும். இந்தக் கடிதத்தைப் பெத்ரோகிராதுக்கு அனுப்புவதற்கு முன்பு ஒரு மணி நேர அவகாசம் மட்டுமே எனக்கு இருக்கிறது. ஆகவே மூளை இல்லாத **நோவயா ஷிஸின்** போக்கைச் சேர்ந்த வருத்தத்திற்குரிய வீரர்களுடைய ''முறையைப்'' பற்றி நான் ஓரிரு வார்த்தைகள் மட்டுமே சொல்ல முடியும். ''பெருந்திரளான மக்களிடம் நம்பிக்கை இழந்த நிலைமையையும் அலட்சியத்தையும் ஏற்படுத்துகின்ற எல்லோருமே புரட்சிக்காகத் தயாரிப்புச் செய்பவர்களே'' என்று தோழர் ரியஸானவ் கூறியதை எதிர்த்து (இக்கூற்று ஆயிரம் தடவை சரியானதே) திரு. வி. பஸாரவ் வாதம் செய்ய முயற்சிக்கிறார்.

வருத்தத்திற்குரிய இலட்சியத்தின் வருத்தத்திற்குரிய வீரர் பின்வருமாறு ''மறுக்கிறார்'':

> ''நம்பிக்கை இழந்த நிலைமையும் அலட்சியமும் என்றாவது வெற்றியடைந்ததுண்டா?''

**நோவயா ஷிஸின்** பத்திரிகையின் பரிதாபத்துக்குரிய முட்டாள்களே! ஒடுக்கப்பட்டிருக்கும் பெருந்திரளான மக்கள் நெடுங்காலத் துன்பங்களினாலும் எல்லா விதமான நெருக்கடிகளும் தீவிரமாகக் கூர்மையடைவதனாலும் நம்பிக்கையிழந்த நிலைமைக்குக் கீழே இறங்காமல்—அதன் போது கைக்கூலியைப் போன்ற பல்வேறு முன் நாடாளுமன்றங்களைப் பற்றியும் புரட்சி செய்வதில் சோம்பேறித்தனமாக விளையாடுவதைப் பற்றியும் லீபெர்டான்கள் சோவியத்துகளைப் புரட்சி மற்றும் ஆட்சியதிகாரத்தின் உறுப்புகளாக இல்லாமல் வெறும் பேச்சுச் சபைகளாக மாற்றியிருப்பதைப் பற்றியும் அந்தப் பெருந்திரளான மக்களிடம் அலட்சியம் ஏற்படாமல்—அவர்கள் வெற்றியடைந்திருக்கும் புரட்சிக்கு ஏதாவது உதாரணங்கள் அவர்களுக்குத் தெரியுமா?

அல்லது **நோவயா ஷிஸின்** பத்திரிகையின் பரிதாபத்துக்குரிய முட்டாள்கள் ஒருவேளை பெருந்திரளான மக்களி

*டம்... உணவுப் பிரச்சினையைப் பற்றி, யுத்தம் நீடிக்கப் படுவதைப் பற்றி, விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதைப் பற்றி அவர்களிடம் அலட்சியத்தைக் கண்டுபிடித்திருக் கிறார்களா?*

நி. லெனின்

*1917 அக்டோபர் 17 (30)இல் எழுதப்பட்டது*

நூல் திரட்டு, தொகுதி *34*, பக்கங்கள் *398—418*

## பதிப்பாளர் குறிப்புகள்

1 **சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள்**—ருஷ்யாவில் *1901* இறுதியிலும் *1902* தொடக்கத்திலும் தோன்றிய குட்டி முதலாளித்துவக் கட்சி.

*1917* பிப்ரவரியில் நடந்த பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் எதிர்ப்புரட்சி இடைக்கால அரசாங்கத்தின் பிரதான தூண்களாகச் செயல்பட்டனர். சோஷலிஸ்டு-புரட்சியாளர்க் கட்சியின் தலைவர்களும் அந்த அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளை வகித்தனர் (கேரென்ஸ்கி, செர்னோவ், அவ்க்சேன்தியெவ்).

*1917* நவம்பர் இறுதியில் இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தனிக் கட்சியொன்றை ஆரம்பித்தார்கள். விவசாயி மக்கள் திரளினரிடம் தம் செல்வாக்கைத் தக்க வைக்க விரும்பிய இடதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் சம்பிரதாய ரீதியில் சோவியத் ஆட்சியை அங்கீகரித்து போல்ஷிவிக்குகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டனர், ஆனால் விரைவில் சோவியத் ஆட்சிக்கு எதிராகச் செயல்படலாயினர்.

ருஷ்யாவில் வெளிநாட்டுத் தலையீட்டின் போதும் உள்நாட்டுப் போரின் போதும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்; வெளிநாட்டுப் படையினர், வெண்படையினர் ஆகியோருக்கு தீவிரமாகவே ஆதரவளித்தனர்; எதிர்ப்புரட்சி சதிகளில் கலந்து கொண்டனர், சோவியத் அரசு, கம்யூனிஸ்டுக் கட்சி ஆகியவற்றின் தலைவர்களுக்கு எதிரான பயங்கரவாதச் செயல்களுக்குத் திட்டமிட்டு ஏற்பாடு செய்தனர்.

**மென்ஷிவிக்குகள்** ருஷ்ய சமூக-ஜனநாயகத்தின் சந்தர்ப்பவாதப் போக்கின் ஆதரவாளர்கள். ரு.ச.ஜ.தொ. கட்சியின் இரண்டாவது காங்கிரசில் *(1903)* மத்திய அமைப்புகளுக்காக நடந்த தேர்தல்களில் லெனின் தலைமையின் கீழ் புரட்சிகர சமூக-ஜனநாயகவாதிகள் பெரும்பான்மை பெற்றனர். இவர்கள் ''போல்ஷிவிக்குகள்'' (''பெரும்பான்மையோர்'') என்று அழைக்கப்படலாயினர். சந்தர்ப்பவாதிகள் சிறுபான்மையின

ராகி ''மென்ஷிவிக்குகள்'' (''சிறுபான்மையோர்'') என்று பெயர் பெற்றனர்.

1917 பிப்ரவரியில் நடைபெற்ற பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தின் உறுப்பினர்களாகி அதன் ஏகாதிபத்தியக் கொள்கையை ஆதரித்தனர். அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக்குகள் சோவியத் ஆட்சியதிகாரத்தை எதிர்த்துச் சதிகளும் கலகங்களும் செய்தனர்.—6.

2 **அனைத்து ருஷ்யாவின் ஜனநாயக மாநாடு** ஆட்சியதிகாரப் பிரச்சினை குறித்து தீர்மானிப்பதற்காக மென்ஷிவிக்குகளின், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் பிடியிலிருந்த சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியால் கூட்டப்பட்டது. இந்த மாநாடு பெத்ரோகிராதில் 1917 அக்டோபர் 14—22இல் (செப்டெம்பர் 27—அக்டோபர் 5இல்) நடைபெற்றது. அதில் 1,500 பிரதிநிதிகளுக்கும் அதிகமாகக் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளது எண்ணிக்கையைக் குறைத்து குட்டி பூர்ஷ்வா, பூர்ஷ்வா அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கூடுதலாக்குவதற்காகவும் அதன் மூலம் தங்களுக்குப் பெரும்பான்மையை ஏற்படுத்துவதற்காகவும் மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தலைவர்கள் எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டனர்.

மென்ஷிவிக்குகள், சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் ஆகியோரின் முகமூடியைக் கிழித்தெறிய ஒரு மேடையாக இந்த மாநாட்டைப் பயன்படுத்தும் பொருட்டு போல்ஷிவிக்குகள் இதில் கலந்து கொண்டனர்.

இடைக்கால அரசாங்கத்தின் ஆலோசனை உறுப்பாக இருந்த முன் நாடாளுமன்றம் எனப்படுவதை இம்மாநாடு தன் பிரதிநிதிகளைக் கொண்டு அமைத்தது.—7.

3 வலுப்பெற்று வரும் புரட்சியை நசுக்குவதற்காக ஜெர்மன் துருப்புகளிடம் பெத்ரோகிராதை ஒப்படைத்து விடலாம் என்று இடைக்கால அரசாங்கம் திட்டமிட்டது இங்கே குறிப்பிடப்படுகிறது.—7.

4 இடைக்கால அரசாங்கம் அரசியல் நிர்ணய சபை கூட்டப்படுவது பற்றி 1917 மார்ச் 2 (15)இல் தனது பிரகடனத்தில் அறிவித்தது. அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்களை செப்டெம்பர் 17 (30)ந் தேதி நிர்ணயித்து அது குறித்த தீர்மானத்தை இடைக்கால

அரசாங்கம் ஜூன் 14 (27)ந் தேதி நிறைவேற்றியது. ஆனால் ஆகஸ்டில் அது இத்தேர்தல்களை நவம்பர் 12 (25) வரை ஒத்திவைத்தது.

அரசியல் நிர்ணய சபைக்கான தேர்தல்கள் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பிறகே நவம்பர் 12 (25)இல் (முன்னர் நிர்ணயித்தபடி) நடைபெற்றன. அக்டோபர் புரட்சிக்கு முன்னதாகத் தயாரிக்கப்பட்டிருந்த பட்டியல்களுக்கு ஏற்பவே, இடைக்கால அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட விதிகளுக்கு ஏற்பவே இத்தேர்தல்கள் நடத்தப்பட்டன. அக்காலத்தில் பொது மக்களின் கணிசமான பகுதியினரால் சோஷலிசப் புரட்சியின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இதைக் கணக்கில் கொண்ட வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்கள் தலைநரம் மற்றும் தொழில் துறை நகரங்களிலிருந்து வெகு தூர மாநிலங்களிலும் பிராந்தியங்களிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றார்கள். சோவியத் அரசாங்கம் அரசியல் நிர்ணய சபையைக் கூட்டியது. அதன் கூட்டம் ஜனவரி 5 (18)ந் தேதி பெத்ரோகிராதில் ஆரம்பமாயிற்று. அரசியல் நிர்ணய சபையில் இருந்த எதிர்ப்புரட்சியாளர் பெரும்பான்மை மத்தியக் கமிட்டியால் பிரேரேபிக்கப்பட்ட ''உழைக்கும் மற்றும் சுரண்டப்பட்ட மக்களின் உரிமைகள் பற்றிய பிரகடனத்தை'' நிராகரித்து, சோவியத் ஆட்சியை அங்கீகரிக்க மறுத்தது. 1918 ஜனவரி 6 (19) அகில ருஷ்ய மத்திய நிர்வாகக் கமிட்டியின் அரசாணைப்படி பூர்ஷ்வா அரசியல் நிர்ணய சபை கலைக்கப்பட்டது.—7.

5 பி. எங்கெல்ஸ், ''ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்''.—9.

6 ஏகாதிபத்திய யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்கள், படைவீரர்கள் மற்றும் கடற்படை வீரர்களின் பெருந்திரளான, தானாகவே ஏற்பட்ட ஆர்ப்பாட்டங்கள் பெத்ரோகிராதில் 1917 ஜூலை 3—4 (16—17) தேதிகளில் நடைபெற்றன. பெருந்திரளான மக்களின் மனோபாவத்தைக் கணக்கிலெடுத்துக் கொண்டு ஓர் ஆர்ப்பாட்டத்தை அமைதியாகவும் கட்டுப்பாட்டுடனும் நடத்துவதற்காக ஜூலை 4(18) ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதென்று போல்ஷிவிக்குகள் முடிவு செய்தனர். சுமார் ஐந்து லட்சம் மக்கள் அதில் பங்கு கொண்டனர்.

மென்ஷிவிக்குகள் மற்றும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களின் தலைமையிலிருந்த சோவியத்துகளின் மத்திய நிர்வாகக் கமிட்டியின் ஆதரவைப் பெற்ற இடைக்கால

அரசாங்கம் அமைதியான முறையில் நடந்து கொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. இம்முறையில் ஆர்ப்பாட்டத்தை ஒடுக்கிய பிறகு, குறிப்பாக போல்ஷிவிக் கட்சிக்கு எதிராக இடைக்கால அரசாங்கத்தின் அடக்குமுறை நீடித்தது. ஜூலை சம்பவங்களுக்குப் பிறகு போல்ஷிவிக்குகள் ''எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கே!'' என்ற கோஷத்தைக் கைவிட்டனர். ஏனென்றால் சோவியத்துகளின் தலைவர்களான சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் மென்ஷிவிக்குகளும் முற்றிலும் எதிர்ப்புரட்சி அணிக்குச் சென்று விட்டார்கள்.—11.

[7] **கர்னீலவ் கலகம்** — *1917 ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற எதிர்ப்புரட்சிக் கலகம். இதற்குத் தலைமைத் தளபதியான ஜாரிஸ்டு ஜெனரல் கர்னீலவ் தலைமை தாங்கினான். பெத்ரோகிராதைப் பிடித்துக் கொள்வது, போல்ஷிவிக் கட்சியை ஒடுக்குவது, சோவியத்துகளைக் கலைப்பது, நாட்டில் இராணுவ சர்வாதிகாரத்தை நிறுவுவது, மன்னராட்சியை மீண்டும் நிறுவப் பாதை அமைப்பது என்பதே இக்கலகத்தின் திட்டம்.*

*போல்ஷிவிக் கட்சியின் தலைமையிலிருந்த தொழிலாளர்கள், விவசாயிகள் கர்னீலவ் கலகத்தை முறியடித்தார்கள். பொதுஜன நிர்ப்பந்தத்தின் காரணமாக கர்னீலவையும் அவனுடைய கூட்டாளிகளையும் கைது செய்து விசாரணையை நடத்தும்படி இடைக்கால அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்க நேர்ந்தது.—12.*

[8] **காடேட்டுகள்**—*அரசியல் அமைப்புச் சட்ட ஜனநாயகக் கட்சியின் உறுப்பினர்கள். இக்கட்சி ருஷ்ய மிதவாத முடியாட்சிவாத முதலாளி வர்க்கத்தினரின் முதன்மையான கட்சியாக இருந்தது. 1905 அக்டோபரில் நிறுவப்பட்டது. பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் தலைமை நிலையைக் கொண்ட இக்கட்சி மக்கள் மற்றும் புரட்சிக்கு எதிரான கொள்கையைப் பின்பற்றியது.*

*மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றிக்குப் பிறகு காடேட்டுகள் சோவியத் ஆட்சியின் சமரசத்துக்கு இடமில்லாத பகைவர்களாகச் செயல் புரிந்தார்கள். எல்லா ஆயுதந்தாங்கிய புரட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் வெளிநாட்டுத் தலையீட்டாளர்களின் படையெடுப்புகளிலும் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டார்கள். அந்நிய தலையீட்டாளர்கள் மற்றும் வெண்படையினர்கள் அழிக்கப்பட்ட பிறகு காடேட்டுகள் தங்கள் எதிர்ப்புரட்சி, சோவியத்துகளுக்கு எதிரான நடவடிக்கையை நிறுத்தவில்லை.—12.*

9 **அலெக்சாண்டிரின்ஸ்கி அரங்கு** பெத்ரோகிராதில் ஜனநாயக மாநாட்டு அமர்வுகள் நடைபெற்ற இடம்.

**பீட்டர்-பால் கோட்டை** மாரிக்கால மாளிகைக்கு எதிராக நேவா ஆற்றின் எதிர்க்கரையில் அமைந்துள்ளது. ஜார் காலத்தில் அரசியல் கைதிகள் இங்கு அடைக்கப்பட்டனர். இந்தக் கோட்டையில் ஏராளமான ஆயுத தளவாடங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்ததால் இது பெத்ரோகிராதின் கேந்திர போர்த்தந்திர முக்கியத்துவமுள்ள இடமாக விளங்கியது. இன்று இது ஒரு வரலாற்றுப் புரட்சிக் காட்சியகம்.—18.

10 **ஜங்கர்கள்**—ஜாரிஸ்டு ருஷ்யாவில் இராணுவ அதிகாரிகளைப் பயிற்றுவிப்பதற்கான பள்ளிகளின் மாணவர்கள்.—18.

11 **கொடிய டிவிஷன்** 1914—1918இல் முதல் உலகப் போரின் போது அமைக்கப்பட்டது, காக்கஸஸ் மலைவாசிகளிடமிருந்து திரட்டப்பட்ட தொண்டர் படையினரைக் கொண்டது. இந்தக் ''கொடிய டிவிஷனைப்'' புரட்சிகரப் பெத்ரோகிராத் மீது தாக்குதல் நடத்த முக்கியமான படையாகப் பயன்படுத்துவதற்கு ஜெனரல் கர்னீலவ் முயன்றான்.—18.

12 பி. எங்கெல்ஸ், ''ஜெர்மனியில் புரட்சியும் எதிர்ப் புரட்சியும்''.—21.

13 **வாந்தே**—பிரான்சில் ஒரு பிராந்தியம். 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் போது எதிர்ப்புரட்சியின் பிறப்பிடமாக விளங்கியது.

**கஸாக்குகள்**—ஜாரிஸ்ட் ருஷ்யாவிலிருந்த ஒரு விசேஷ சமூகப் பிரிவினர். இவர்கள் இராணுவத்தின் குதிரைப் படையில் சேர்ந்து அரசாங்கத்துக்குச் சேவை செய்வது வழக்கம். இவர்களைக் கொண்டு விசேஷமான இராணுவப் பிரிவுகள் அமைக்கப்பட்டிருந்தன. அவை புரட்சி இயக்கத்துக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டன.—21.

14 **நோவயா ஷிஸின்** (''புதிய வாழ்க்கை'') என்ற பத்திரிகையின் ஆதரவாளர்கள் இங்கே குறிப்பிடப்படுகிறார்கள். இந்தத் தினசரி 1917 ஏப்ரல் 18 (மே 1) முதல் 1918 ஜூலை வரை வெளியிடப்பட்டது. மென்ஷிவிக் சர்வதேசியவாதிகளும் எழுத்தாளர்களும் அடங்கிய குழுவினர் இந்த நாளிதழை நடத்தி வந்தனர்.

இப்பத்திரிகை அக்டோபர் சோஷலிசப் புரட்சியையும் சோவியத் ஆட்சியதிகாரத்தையும் எதிர்த்து வந்தது.—26.

15 **தியேலொ நரோதா** *(''மக்கள் இலட்சியம்'')—சோஷலிஸ்டு-புரட்சியாளர்க் கட்சியின் நாளேடு. 1917 மார்ச்சிலிருந்து 1918 ஜூலை வரை பெத்ரோகிராதில் வெவ்வேறு தலைப்புகளுடன் வெளிவந்தது. தேசப் பாதுகாப்பென்று சொல்லி சமரசவாத நிலையை ஏற்று பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்துக்கு இது ஆதரவளித்து வந்தது.—26.*

16 **ருஸ்கயா வோல்யா** *(''ருஷ்யச் சுதந்திரம்'')—ஜாரிஸ்ட் ருஷ்யாவில் உள்துறை அமைச்சராக இருந்த புரோடபோபவ் என்பவர் இந்த நாளிதழைத் தொடங்கினார். பெரும் வங்கிகள் இதற்கு நிதியுதவி அளித்தன. 1916 டிசம்பர் முதல் பெத்ரோகிராதிலிருந்து வெளியிடப்பட்டது. பிப்ரவரியில் நடைபெற்ற பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு போல்ஷவிக்குகளுக்கு எதிராக அவதூறான பிரசார இயக்கத்தை நடத்தியது. 1917 அக்டோபர் 25 (நவம்பர் 7)ந் தேதியன்று இராணுவப் புரட்சிகரக் கமிட்டி இந்த நாளிதழைத் தடை செய்தது.—27.*

17 **''லீபெர்டான்கள்?''**—*லீபெர்,டான் என்னும் இரு மென்ஷிவிக் தலைவர்களையும் அவர்களது ஆதரவாளர்களையும் குறிக்கும் கேலிப்பெயர். ''லீபெர்டான்'' என்று தலைப்பிட்டு ''சொட்ஸியால்-டெமக்ராட்'' (''சமூக-ஜனநாயகவாதி'') என்னும் போல்ஷிவிக் மாஸ்கோ செய்திப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட தெம்யான் பேத்னி எழுதிய கிண்டல் கதையை ஒட்டி இக்கேலிப் பெயர் இவர்களுக்கு உரியதாயிற்று.—31.*

18 *1917 பிப்ரவரியில் நடைபெற்ற பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சி இங்கே குறிப்பிடப்படுகிறது.—42.*

19 *வி. இ. லெனின் கீழ்வரும் விவரங்களைக் குறிப்பிடுகிறார்:*

*அயல்துறை அமைச்சரான மில்யுக்கொவ் இறுதி வெற்றி கிட்டும் வரை யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவோம் என்று அறிவித்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஏப்ரல் 12—22 (மே 4—5) தேதிகளில் பெத்ரோகிராதில் சுமார் ஒரு லட்சம் தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் ஆர்ப்பாட்டம்*

நடைபெற்றது. இந்த ஏப்ரல் மாத ஆர்ப்பாட்டத்திலிருந்து அரசாங்கத்தில் நெருக்கடி ஆரம்பமாயிற்று.

பெத்ரோகிராதின் தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் பிரதிநிதிகளின் மாநாட்டில் ஜூன் 10 (23)ந் தேதியன்று ஆர்ப்பாட்டத்தை நடத்துவதென்று போல்ஷிவிக் கட்சி முடிவு செய்தது. சோவியத்துகளின் முதலாவது அகில ருஷ்ய காங்கிரசின் போது எல்லா ஆட்சியதிகாரமும் சோவியத்துகளுக்கு மாற்றப்பட வேண்டுமென்று கோரிய தொழிலாளர்கள் மற்றும் படைவீரர்களின் சித்தத்தை எடுத்துக்காட்டுவது இந்த ஆர்ப்பாட்டத்தின் நோக்கம். காங்கிரசின் பெரும்பான்மையைக் கொண்டிருந்த மென்ஷிவிக்குகளும் சோஷலிஸ்டு-புரட்சியாளர்களும் அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்த அனுமதிக்கக் கூடாதென்று முடிவு செய்தனர். அதைத் தடை செய்வதென்ற தீர்மானத்தை ஜூன் 9 (22)ந் தேதியன்று நிறைவேற்றினர். போல்ஷிவிக் கட்சியின் மத்தியக் கமிட்டி சோவியத்துகளின் காங்கிரசின் முடிவை எதிர்க்க விரும்பாமல் அந்த ஆர்ப்பாட்டத்தை ரத்துச் செய்ய முடிவு செய்தது. தொழிலாளர்களும் படைவீரர்களும் ஆர்ப்பாட்டம் நடத்தாதிருக்கும்படி செய்தது.

*ஜூன் 3—4 (16—17)* தேதிய சம்பவங்களைப் பற்றி குறிப்பு 6ஐப் பார்க்கவும்.—47.

20 **நோவொயே விரேமியா** (''புதிய காலம்'')—1868 முதல் 1917 வரை பீட்டர்ஸ்பர்க்கில் வெளியிடப்பட்ட நாளிதழ். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு எதிர்ப்புரட்சியை ஆதரித்தது. போல்ஷிவிக்குகளை ஒடுக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தது. 1917 அக்டோபர் 26 (நவம்பர் 8)ந் தேதியன்று இராணுவப் புரட்சிகரக் கமிட்டி இந்த நாளிதழைத் தடை செய்தது.—50.

# பெயர்க் குறிப்பகராதி

**அவ்க்சேன்தியெவ், என். தி.** *(1878—1943)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பின் விவசாயிகள் பிரதிநிதிகளது அனைத்து ருஷ்ய சோவியத்தின் செயற்குழுத் தலைவர்.—25, 40.*

**கம்கோவ், பி. தி.** *(1885—1938)—சோஷலிஸ்டு-புரட்சியாளர்க் கட்சியின் இடதுசாரிப் பிரிவின் அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்களில் ஒருவர்.—40.*

**கர்னிலவ், எல். ஜி.** *(1870—1918) — ஜாரிஸ்டு ஜெனரல், முடியாட்சிவாதி. 1917 ஜூலை முதல் ருஷ்யப் படைகளின் தலைமைத் தளபதி. 1917 ஆகஸ்டில் எதிர்ப்புரட்சிக் கலகத்துக்குத் தலைமை தாங்கினார்.—12, 29, 32, 35.*

**குவஸ்தியோவ், கே. ஏ.** *(பிறப்பு: 1883)—மென்ஷிவிக். 1917 செப்டெம்பர் முதல் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் உழைப்பு அமைச்சராக இருந்தார்.—50.*

**கேரென்ஸ்கி, ஏ. எஃப்.** *(1881—1970) — சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். 1917 பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பின் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் அமைச்சர்-அதிபராகவும் தலைமைத் தளபதியாகவும் இருந்தார்.—6, 7, 9, 13, 32, 37, 38, 39, 42, 48, 50.*

**சுவோரின், ஏ. எஸ்.** *(1834—1912)—பத்திரிகையாளர், ''நோவொயே விரேமியா'' என்ற பிற்போக்கு செய்தித்தாளின் வெளியிடுபவராகவும் உடைமையாளராகவும் இருந்தார். 1917இல் அவருடைய மகன்களின் ஆசிரியப் பொறுப்பில் அந்த செய்தித்தாள் வெளியிடப்பட்டது.—49.*

**சுஹானவ், என். (கிம்மெர், என். என்.)** *(1882—1940)—பொருளியலாளர் மற்றும் கட்டுரையாளர், மென்*

ஷிவிக். ''நோவயா ஷிஸின்'' என்ற பாதி மென்ஷிவிக் செய்தித்தாளில் கட்டுரைகள் எழுதி வந்தார். பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தைத் தீவிரமாக ஆதரித்தார். —*40, 41.*

**செர்னோவ், வி. எம்.** *(1876—1952)—சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் தலைவர்களில் ஒருவர். பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் விவசாய அமைச்சராக இருந்தார்.—13, 39, 47.*

**டன்தோன்** [Danton], **ஜார்ஜ் ஜாக்** *(1759—1794)—18ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்த பிரெஞ்சு பூர்ஷ்வாப் புரட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்.—21, 22.*

**தெஸெரெத்தேலி, ஐ. ஜி.** *(1882—1959)—மென்ஷிவிக்; 1917பிப்ரவரி பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு பெத்ரோகிராத் சோவியத்தின் நிர்வாகக் கமிட்டியின் உறுப்பினர்; 1917 மேயில் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் சேர்ந்தார்.—13.*

**நிக்கீத்தின், ஏ.எம்.** *(பிறப்பு:1876)—மென்ஷிவிக் கட்சியைச் சேர்ந்தவர், பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் உள்நாட்டு அமைச்சராக இருந்தார்.—50.*

**பத்ரேசவ், ஏ. என்.** *(1869—1934)—மென்ஷிவிக் கட்சியின் தலைவர்களில் ஒருவர், போல்ஷிவிக் கட்சியையும் சோஷலிசப் புரட்சிக்கான தயாரிப்புகளையும் எதிர்த்தார்.—50.*

**பஸாரவ், வி. (ருத்னெவ், வி. ஏ.)** *(1874—1939)—ருஷ்ய சமூக-ஜனநாயகவாதி, 1917இல் மென்ஷிவிக் சர்வதேசியவாதி. ''நோவயா ஷிஸின்'' என்னும் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவர்.—54, 55.*

**பிளான்சன், ஏ. ஏ.**—*இரயில்வேத் தொழிலாளர் தொழிற் சங்கத்தின் அகில ருஷ்ய நிர்வாகக் கமிட்டியின் தலைவர்களில் ஒருவர், வலதுசாரி சோஷலிஸ்டு-புரட்சியாளர்.—41.*

**பெர்ன்ஷ்டைன்** [Bernstein], **எடுவார்டு** *(1850—1932)—ஜெர்மன் சமூக-ஜனநாயகம், இரண்டாவது அகிலம் ஆகியவற்றின் படுமோசமான சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர். திருத்தல்வாதம், சீர்திருத்தவாதம் ஆகியவற்றின் தத்துவவாதி.—10.*

மக்லக்கோவ், வி. ஏ. *(1870—1957)* — *வழக்குரைஞர், காடேட்டுகள் கட்சியின் முக்கியமான பிரமுகர்களில் ஒருவர்.—35.*

மார்க்ஸ் [Marx], கார்ல் *(1818—1883)—விஞ்ஞானக் கம்யூனிசத்தின் மூலவர்.—9, 10, 16, 20, 21, 22, 51, 53.*

மார்த்தவ், எல். (ஸெதர்பாவும், யூ. ஓ.) *(1873—1923)—மென்ஷிவிக் தலைவர்களில் ஒருவர், 1917 பிப்ரவரியில் நடைபெற்ற பூர்ஷ்வா ஜனநாயகப் புரட்சிக்குப் பிறகு மென்ஷிவிக் சர்வதேசியவாதிகளின் குழுவுக்குத் தலைமை தாங்கினார்.—40.*

மில்யுக்கோவ், பி. என். *(1859—1943)—காடேட்டுகள் கட்சியின் தலைவர்களில் ஒருவர், ருஷ்யாவின் ஏகாதிபத்திய முதலாளி வர்க்க சித்தாந்தி. 1917இல் பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் அயல் விவகாரத் துறை அமைச்சர்.—50.*

ரக்கீத்னிக்கவ், என். ஐ. *(பிறப்பு: 1864)—சோஷலிஸ்டு-புரட்சியாளர், பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் விவசாய இலாகாவின் துணை அமைச்சராக இருந்தவர்.—50.*

ரியபுஷீன்ஸ்கி, பி. பி. *(1871—1924) — மாஸ்கோவைச் சேர்ந்த பெரும் வங்கிக்காரர் மற்றும் தொழிலதிபர்; எதிர்ப்புரட்சியின் தலைவர்களில் ஒருவர்.—50.*

ரியஸானவ், தி. பி. *(1870—1938)—சமூக-ஜனநாயகவாதி, ரு. ச. ஜ. தொ. கட்சியின் ஆறாவது காங்கிரசில் (1917) கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார், தொழிற்சங்க இயக்கத்தில் சேவை செய்தார்.—55.*

ரெனொடேல் [Renaudel], பியேர் *(1871—1935)—பிரெஞ்சு சோஷலிஸ்டுக் கட்சியின் சீர்திருத்தவாதத் தலைவர்களில் ஒருவர்.—37, 38.*

ரொத்ஸியான்கோ, எம். வி. *(1859 — 1924)—பெரிய நிலப் பிரபு, முடியரசுவாதி, கர்னீலவ் கலகத்தின் தலைவர்களில் ஒருவர்.—32, 33, 34, 39, 41, 43, 44, 49, 50.*

லீப்க்னெஹ்ட் [Liebknecht], கார்ல் *(1871—1919)—ஜெர்மன்*

*மற்றும் சர்வதேசத் தொழிலாளர் இயக்கத்தின் பிரபல பிரமுகர், ஜெர்மன் சமூக-ஜனநாயகத்தின் இடது சாரிப் பிரிவின் தலைவர்களில் ஒருவர். 1916இல் இராணுவ எதிர்ப்புப் பிரசாரத்திற்காகச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டார். 1918 நவம்பர் ஜெர்மன் புரட்சிக்குப் பிறகு ஜெர்மன் கம்யூனிஸ்டுக் கட்சியின் நிறுவகர்களில் ஒருவர். 1919 ஜனவரியில் எதிர்ப் புரட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டார். —37.*

**வில்ஹெல்ம் இரண்டாவது** [Welhelm II], **(ஹோஹன்ஸோலர்ன்)** *(1859—1941)—ஜெர்மன் பேரரசர், பிரஷ்யாவின் மன்னர் (1888—1918).—34, 44.*

**விஹ்லாயெவ், பி. ஏ.** *(1869—1928)—புள்ளியியலாளர் மற்றும் நிலவியலாளர், சோஷலிஸ்டு-புரட்சியாளர் கட்சியின் உறுப்பினர். பூர்ஷ்வா இடைக்கால அரசாங்கத்தில் விவசாயத் துறையின் துணை அமைச்சராக இருந்தவர்.—50.*

**ஷெய்டெமன்** [Scheidemann], **ஃபிலீப்** *(1865—1939)—ஜெர்மன் சமூக-ஜனநாயகக் கட்சியின் கடைக்கோடி வலது சாரிச் சந்தர்ப்பவாதப் பிரிவின் தலைவர்களில் ஒருவர்.—37, 38.*

**ஸஸ்லாவ்ஸ்கி, தி. ஐ.** *(1880—1965)—ருஷ்யப் பத்திரிகையாளர், முதல் உலக யுத்தத்தின் போது (1914—1918) சமூக-தேசியவெறியராக இருந்தார். 1917—1918இல் போல்ஷிவிக்குகளை எதிர்த்தார்.—50.*

## வாசகர்களுக்கு

இந்தப் புத்தகத்தைப் பற்றியும் இதன் தயாரிப்பைப் பற்றியும் தங்கள் கருத்தை அறியவும், அடுத்து வரும் வெளியீடுகள் சம்பந்தமாகத் தங்கள் ஆலோசனைகளை வரவேற்கவும் முன்னேற்றப் பதிப்பகம் மகிழ்ச்சியோடு காத்திருக்கிறது.

தங்கள் கடிதங்களை "Progress Publishers, 17, Zubovsky Boulevard, Moscow, USSR" என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.

**விற்பனையாளர்கள்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்**

**தலைமை அலுவலகம்**
*41—பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,*
*சென்னை—600098*

**கிளைகள்**

*136, அண்ணா சாலை, சென்னை—600002*
*80, மேலக்கோபுர வீதி, மதுரை—625001*
*3—4, நேரு ஸ்டேடியம், கோவை—641018*
*42/7, சிங்காரத் தோப்பு, திருச்சி—620008*
*செர்ரி ரோடு, சேலம்—636001*
*1—ஏ, திருவனந்தபுரம் ரோடு, திருநெல்வேலி—627003*
*16—சி, வெள்ளாளர் தெரு, பாண்டிச்சேரி—605001*
*வி. வி. கே. ஹாஸ்டல், போர்ட் ரவுண்ட்,*
*வேலூர்—632001*

**விற்பனை நிலையங்கள்**

*பஸ் நிலையம், திருநெல்வேலி—627001*
*சேரிங் கிராஸ், ஊட்டி—643001*
*மெயின் ரோடு, திண்டுக்கல்—624001*
*87/89, ஒப்பணக்காரத் தெரு, கோவை—641001*
*பஸ் நிலையம், சேலம்—636001*
*நியூ செஞ்சுரி நடமாடும் புத்தக நிலையங்கள்*

ELAN BOOKS
SIGNATURE
NORWAY

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

மார்க்சியமும் புரட்சி எழுச்சியும் | லெனின்

# மார்க்ஸ் எங்கெல்ஸ் லெனின் நூல்கள்



மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனினின் படைப்புகளை ''முன்னேற்றப் பதிப்பகம்'' 50க்கும் மேற்பட்ட உலக மொழிகளில் பிரசுரித்து வருகிறது. இவை திரட்டு நூல்களாகவும் தேர்வு நூல்களாகவும் குறிப்பிட்ட தலைப்புகளிலான தொகுப்புகளாகவும் தனிப்பட்ட புத்தகங்களாகவும் வெளிவருகின்றன.

இந்தத் தொடர்வரிசையில் அடங்கியுள்ள தொகுதிகளிலும் முக்கியமான படைப்புகளிலும் மார்க்சிய-லெனினிய ஆசான்கள் இயற்கை, சமுதாயம், சிந்தனை ஆகியவற்றின் வளர்ச்சி பற்றிய தம் போதனையை வெளியிட்டுள்ளனர், முதலாளித்துவத்தின் சமூக-பொருளாதார உறவுகளையும் சோஷலிசத்தின் அடிப்படை நியதிகளையும் ஆராய்கின்றனர். இந்நூல்களில் ஆராயப்பட்டுள்ள பிரச்சினைகள் நம் காலத்திற்கும் முக்கியமானவை. எல்லா நூல்களுடனும் நவீன விஞ்ஞான தகவல் அனுபந்தம் இணைக்கப்பட்டுள்ளது.

முன்னேற்றப் பதிப்பகம்

ISBN 5-01-002401-2